விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

உங்கள் தேவைக்கான
சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.
கே. எம்.
அரிசிமீயாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Velegrams: 'SUTANTIRAN' COLOMBO

Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

தாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஸ்ரீ கார்த்திகை மீ 25உ புதன்கிழமை — Colombo, December, 10, 1947 — ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 26 | இதழ் 189

உழுது பயிரிடக்கூடிய 1 கோடி ஏக்கர் நிலம் உறங்குகிறது

நீர்ப்பாசன வசதியளிக்கும் நிர்வாக சக்தி சூன்யம்

அடுத்துள்ள இந்தியாவின் பிரமாண்டமான திட்டங்களைப் பாருங்கள்

ஸ்டெர்லிங் நிதியெல்லாம் உணவுக்கு விரயம் செய்யின் இலங்கை ஓட்டாண்டியாகிவிடும்

கால் நூற்றாண்டு காலமாக மக்கள் கதறிய பின் கண் துடைக்கவா கரையூர் திட்டம்

யூ. என். பி. அரசாங்கத்தின் பிற்போக்கு நிர்வாகத்துக்கு சாவகச்சேரி பிரதிநிதி கொடுக்கும் சாட்டை

கொழும்பு, டிச. 9

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் ஒருமணிக்கு சபாநாயகர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேச பொருளாதாரம், விவசாய அபிவிருத்தி, சமூக சேவை, சர்வதேச தொடர்பு ஸ்டெர்லிங் பாக்கிகள் முதலியவைபற்றி பல அங்கத்தினர்களும் பேசினார்கள்.

விவசாயத்துக்கு எடுக்கக்கூடிய ஒருகோடியே அறுபது லட்சம் ஏக்கர் நிலத்தில் 60 லட்சம் ஏக்கர்தான் விவசாயத்துக்கு எடுக்கப்படுவதாகவும் இந்திய அரசாங்கத்தின் விவசாய அபிவிருத்தி திட்டங்களைப்பார்த்து இலங்கையும் நடக்கவேண்டுமென்றும் ஸ்டெர்லிங் பிரச்னைகளை அனாவசியமாக செலவிடப்படாதென்றும் பிற்போக்கு நிர்வாகத்தை திருத்தியமைக்க வேண்டுமென்றும் மக்களை ஏமாற்றவே கரையூர் சேரி ஒழிப்புத்திட்டம் கொண்டு வரப்பட்டதென்றும் சாவகச்சேரி பிரதிநிதி சபையில் கூறினார்.

பௌத்த மதத்தை மந்திரிகள் எல்லா தேசங்களுக்கும் பரப்பி சர்வதேச சகோதரத்வத்தை நிலைநாட்டவிரும்புகின்றனரென்றும் ஆனால் சர்வதேச பொருளாதாரத் தொடர்பு பற்றி இடதுசாரிகள் கூறின் அவற்றைக் கண்டிக்கின்றனர் என்றும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறினார். சபை நடவடிக்கை இன்று பிற்பகல் 1 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் திரு. ஏ. எப். மொலமுரே தலைமையில் ஆரம்பமாயிற்று. இக்கூட்டத்தில் வரவு செலவுத் திட்ட விவாதம் தொடர்ந்து ஆரம்பித்தது. போக்குவரத்து மந்திரி திரு ஜே. எல் கொத்தலாவல பேசினார். அவர் கூறியதாவது:-

சந்தர்ப்பவாதிகள்

இலங்கை சமசமாஜக் கட்சித் தலைவரும் ருவான்வலை அங்கத்தவருமான டாக்டர் என். எம் பெரேரா வகுப்பு வாதத்தில் ஊறிப்பழுத்துள்ள அங்கத்தினருடன் சேர்ந்து கொண்டுள்ளார். மஸ்கெலியா தொகுதி அங்கத்தவர் பேசுகையில் இந்திய முதலாளிகளின் தொனிதான் எதிரொலித்தது. மார்க்ஸிஸ வாதிகள் சந்தர்ப்ப வாதிகளே. அவர்கள் எல்லை வரம்பற்ற பெரிய எண்ணங்களைக் கொண்டவர்கள். இச்சபையில் வானளாவிப் பேசியவர்களெல்லாம் நிலச்சுவான்தார்களும், பணம் வட்டிக்குக் கொடுப்போரும், சட்ட அறிஞர்களுந்தான். இவர்களிடமிருந்து பொதுமக்கள் எவற்றை எதிர் பார்க்க முடியும். அவர்களின் முதுகுகளில் ஏறியிருந்து ஆதிக்கத்தைக் கைப்பற்றத்தான் தெரியும். இதுவரையிலும் மார்க்ஸியவாதிகள் இந்தவழியைத்தான் கையாண்டுள்ளனர்.

என்னுடைய நிர்வாகத்தின் கீழ் உள்ள இலாகாக்கள் திறமையாக நிர்வகிக்கப் படுகின்றன. வருமானமும் அதிகம் கிடைக்கின்றது. என்னுடைய பொறுப்பில் இருக்கும் இலாகாக்களில் 75 சத வீதத உத்தியோகஸ்தர்களும் இலங்கையரே. ஐரோப்பியரும் இந்தியரும் வகித்துவந்த உயர்தரப் பதவிகள் எல்லாம் இப்பொழுது இலங்கையர் கைகளில் இருக்கின்றன.

துறைமுக தொழிலாளர்

முன் நடந்த வேலை நிறுத்தங்களினால் அரசாங்கத்துக்கு அதிக பண நஷ்டமேற்பட்டுள்ளது. இந்த வேலை நிறுத்தங்களினால் பொது மக்களது பணம் அனாவசியமாக செலவு செய்யப்பட்டுவிட்டது. துறைமுகத்தில் வேலை நிறுத்தம் செய்த 2000 தொழிலாளரும் 3 நாட்களில் திரும்பி வந்து வேலைகளை ஏற்றுவிட்டனர். தொழிலாளர்களை பிழையான வழிகளிலே தலைவர்கள் நடத்திச் சென்றுள்ளனர். இன்று தொழிலாளர்களுக்குப் புத்தி வந்து விட்டது. தொழிலாளர் கூட்டத்துக்கு நான் தலைமை வகித்திருந்தேன். ஒழுக்கமான முறையில் நடத்தப்பட்ட கூட்டங்களை வந்து பார்க்குமாறு இடதுசாரிக் கட்சித் தலைவர்களை அழைத்திருந்தேன். துறைமுக தொழிலாளர்களுக்கு உதவி புரியும் திட்டமொன்றை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளேன்.

தொழிலாளரைப் பிழையாக நடத்திச் செல்வது சோஷலிஸமல்ல. இன்று தொழிலாளர் தங்கள் நிலைமைகளை உணருகின்றனர். இன்று தொழில் இலாகா 1000 வீடு கட்டும் திட்டமொன்றை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது. இவற்றில் 600 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இந்தவீடுகள் தொழிலாளர்களுக்கேயாகும்.

பொது விமானப் போக்குவரத்து இலாகா

பொது விமானப் போக்குவரத்து இலாக்காவுக்கு மூன்று விமானங்கள் வாங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு சுமார் 3 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இந்தியாவுக்கு புதிய விமானப் போக்கு வரத்து நடத்த திட்டம் வகுத்துள்ளோம். இந்த புதிய பிரயாணத்தையில் கொழும்பு, காங்கேசன்துறை, திருச்சி, மதுரை சென்னை சேர்க்கப்பட்டுள்ளன விமானங்கள் அன்றே திரும்பி வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மின்சார இலாகா

ரயில்வே இலாகா தொழிற்சாலைக்கு எடுக்கப்படுவோர்களை பயிற்சி அளிக்க புதிய ஏற்பாடுகள் செய்துள்ளேன். இந்த முறையில் வெற்றி கிடைத்துள்ளது. மின்சார இலாகா இப்பொழுதைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை. இன்று ஆயிரம் பேர் மின்சார சக்தி வேண்டுமென்று விண்ணப்பித்துள்ளனர். நீர் வீழ்ச்சி மின்சாரத்திட்ட வேலைகள் மிக துரிதமாக செய்யப்படுகின்றன. இந்த திட்டம் பூர்த்தியடைந்த பின் அதிலிருந்து 100,000 கில்லோவாட்ஸ் மின்சார சக்தி விநியோகம் செய்ய முடியும். இது இன்று விநியோகம் செய்யப்படும் சக்தியைப் போன்று பத்து மடங்கானதாகும். இந்த 100,000 கில்லோ வாட்ஸ மின்சார சக்தியையும் விநியோகிக்கும் முறையை நான்கு பகுதிகளாக பிரிக்கப் படும். ஒவ்வொரு பகுதியிலும் 25,000 கில்லோ வாட்ஸ மின்சார சக்தி விநியோகிக்கப்படும். இந்த நீர் வீழ்ச்சி மின்சார வேலைத் திட்டங்கள் இதுவரை முடிந்திருக்கும். யுத்த காலத்தினால் வெளி நாடுகளில் இருந்து வேண்டிய தளபாடங்களைத் தருவித்துக் கொள்ள முடியவில்லை அதனால்தான் இந்த வேலைகள் தாமதித்து விட்டன. இந்த திட்ட வேலைகள் 1950-ம் ஆண்டு வரையும் முடிவடைந்து விடும்.

ரயில்வேக்கு 160 லட்சம் ரூபாய் நஷ்டம்

ரயில்வே இலாகா கடந்த கால கடன்களை யெல்லாம் செலுத்தி முடித்து விட்டது. இந்த வருடத்தில் நஷ்டமேற்படத் தொடங்கிவிட்டது இந்த வருடத்தில் ரயில்வே இலாகாவுக்கு 160 லட்சம் ரூபாய் நஷ்டம்.

பஸ் போக்குவரத்து

நெல்ஸன் பஸ் போக்குவரத்து திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படுமுன் பஸ் போக்குவரத்தினால் அதிக நஷ்டங்கள் ஏற்பட்டு வந்ததுடன் பஸ போக்குவரத்தும் மிகவும் சீர்கேடான நிலையிலேதான் இருந்தும் வந்தது. பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்குவதில் எத்தனையோ கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டும். நானுஓயாவுக்கும் - ராகலைக்கும் இடையில் ரயில் போக்குவரத்துக்குப் பதிலாக பஸ் போக்குவரத்தை ஸ்தாபித்திருந்தோம். இது பல கஷ்டங்களையும் கொடுத்து விட்டது. அரசாங்கத்தின் பஸ்களிலுள்ள பல இயந்திர பகுதிகளும் களவு போயவிட்டன. பொது மக்கள் அரசாங்க சொத்துக்கள், பொதுச் சொத்துக்கள்தான் என்பதை உணரும் வரை இது கஷ்டம்தான். அதன்பின் தான் பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்க முடியும்

தொழிலாளரை 8 மணி நேரமே வேலைசெய்யும்படியும் மேணி நேரவேலைக்குமேல்வேலைசெய்ய முடியாதென்று தொழிலாளர் கோர வேண்டுமென்றும் இடதுசாரியினர் தொழிலாளருக்கு கூறியிருந்தால் அது மிகவும் நல்ல விஷயமே. ஆனால் முடியாத விஷயங்களையும் கொடுக்க வேண்டுமென்று தொழிலாளரைக் கேட்கும்படி செய்தால் என்ன செய்வது? யூ. என். பி-யின் பலத்தை இப்பொழுது கால்பேஸ மைதானத்திலேயோ அன்றி வாழைத்தோட்டத்திலேயோ பரிசோதித்து அறியலாம்.

அலுத்நுவர தொகுதி

அலுதநுவர தொகுதி அங்கத்தவர் திரு. ராமானுஜம் பேசுகையில் தமது தொகுதி கவனிக்கப்படாது இருப்பதாகவும், அங்குள்ளவர்களுக்கு காணி கிடையாதென்றும வைத்திய வசதிகள் இல்லை யென்றும் அங்கு பள்ளிக்கூட வசதிகள்கூட இல்லையென்றும் இந்த தொகுதிக்கு போக்கு வரத்து செய்ய தகுதியான ரஸ்தாக்கள் கிடையாதென்றும், இத்தொகுதியில் 16 மைல் ரஸ்தாவொன்றை அமைப்பதற்கு அரசாங்கத்துக்கு 12 வருடங்கள் பிடித்தனவென்றும் கூறினார்.

கலகா தொகுதி பிரதிநிதி திரு டி. பி பனபொக்கே பேசுகையில் தமது தொகுதியில் விவசாயம் கவனிக்கப்படவில்லையென்றும் தமது தொகுதியில் விவசாய அபிவிருத்திக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றும் முதலில் இங்குள்ள விவசாயிகளின் நலத்துக்காக சிறிய குளங்கள் திருத்தப்பட வேண்டுமென்றும் கிருஷிகவசதியீனங்கள்காரணமாக காணிகள் இருந்தும் விவசாயம் செய்ய முடியவில்லை யென்றும் கூறினார். தொடர்ந்து பேசுகையில் இப்பகுதி மக்களுக்கு வைத்திய வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் குழந்தைகளுக்கு கல்வி வசதிகள் அமைக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

திரு. ரெஜி பெரேரா பேசுகையில் கூறியதாவது:-

போக்குவரத்து மந்திரி கையாளும் வழிகள் கொழும்பு நகரில் உள்ள தொழிலாளர்களை பிழையான வழிகளில் செலுத்துகின்றதென்பது பகிரங்கமானதாகும். போக்குவரத்துகளை தேசியமயமாக்கியிருக்கும் மற்ற நாடுகளில் இந்த முறை அதிக வெற்றியைக் கொடுத்துள்ளது

(4-ம் பக்கம் பார்க்க)

உலகைத் திடுக்கிடச் செய்யும் உயரிடத்துக் காதல்

வின்சர் கோமகனுக்குப் பின் ஏற்பட்டுள்ள வியப்புறு சம்பவம்

விதவையாக இருக்கும் சீனக் குடியரசு ஸ்தாபகர் மனைவி, அமெரிக்க ராணுவ அதிகாரி மீது கொண்டிருக்கும் காதல்

மறைத்துவைக்க சீன அரசாங்கம் செய்த முயற்சியை அமெரிக்க நிருபர் அம்பலப்படுத்துகிறார்

வாஷிங்டன், டிச. 8

உலகையே கதிகலங்கடித்து உலக சரித்திரங்களை மாற்றியமைத்த ருசிகரமான காதல் சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. சமீப காலத்தில் சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஏக சக்ராதிபதியாக விளங்கிய எட்டாவது எட்வர்ட் சக்கரவர்த்தி அமெரிக்க மாதின் மீது கொண்ட அமோகமான காதலின் காரணமாக சிம்மாசனத்தைத் துறந்த சம்பவம் இக்காலத்திய மக்கள் யாவரும் அறிந்ததே. அதே போன்று உலகையே பிரமிப்படையச் செய்யும் மற்றொரு காதல் சம்பவமொன்று அரசாங்கத்தால் எவ்வளவோமறைத்து வைத்த போதிலும் அம்பலத்திற்கு வந்திருக்கிறது.

இக்காதல் சம்பவத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் மாது [illegible] சீனத்தில் குடியரசை நிறுவிய சீனத்தின் தந்தையும் 50 கோடி சீன மக்களின் நிகரில்லாத் தலைவருமான காலஞ்சென்ற சன்யாட் சென்னின மனைவியாரே! ஸ்ரீமதி சன்யாட் சென்னிக்கு இப்பொழுது 55 வயதாகிறது. சீனக் குடியரசைத் ஸ்தாபித்த சன்யாட் சென்னின் மனைவி விதவையாக இருந்து வருகிறார். சீனத்தின் பிரசித்தி பெற்ற ஸுங் குடும்பத்தைச் சேர்ந்த ஸுங் சகோதரிகளில் ஸ்ரீமதி சன்யாட் சென் இளைய சகோதரியாவர். வின்சர் கோமகனின் உள்ளத்தைப் பறித்த ஸ்ரீமதி மேரி வாலிஸ் சிம்சன் எந்த ஊரில் பிறந்தாரோ அதே ஊரைச் சேர்ந்த அதாவது அமெரிக்காவிலுள்ள பால்டிமோர் நகரைச் சேர்ந்த ஓர் அமெரிக்க ராணுவ அதிகாரி ஸ்ரீமதி சன்யாட் சென்னின் உள்ளத்தைப் பறித்திருக்கிறார். அவருடைய பெயர் கேப்டன் ஜெரால்டு டானிபாம் ஸ்ரீமதி சன்யாட் சென்னிக்கும் கேப்டன் ஜெரால்டு டானிபாமுக்கும் ஏற்பட்டுள்ள காதல் சம்பவத்தைக் குறித்து பீயர்சன் என்ற அமெரிக்கபத்திரிகா நிருபர் அமெரிக்க பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:-

சீனக் குடியரசு ஸ்தாபகரான காலஞ்சென்ற சன்யாட் சென்னின் மனைவியாருக்கும் அமெரிக்க ராணுவ அதிகாரியான பால்டிமோர் நகரைச் சேர்ந்த கேப்டன் ஜெரால்டு டானிபாமுக்கும் ஏற்பட்டுள்ள காதல் சம்பவத்தை உலகம் அறியாதபடி மறைக்க சீன சர்க்கார் முயற்சித்து வருகிறார்கள். வின்சர் கோமகன் காதல் சம்பவத்திற்குப் பின் உலகை திடுக்கிடச் செய்ய வல்ல காதல் சம்பவம் உலகில் இதுவே முதலாவதாகும் ஸ்ரீமதி சன்யாட் சென் இப்பொழுது சீனக் குடியரசுத் தலைவராக இருக்கும் சியாங்கை-ஷேக்கின் மைத்துனி. சீனத்தில் பிரபலமான ஸுங் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளில் இளையவர்.

(4-ம் பக்கம் பார்க்க)

இரட்டைப் பிரஜா உரிமை இந்தியருக்கு இல்லை

இலங்கைப் பிரஜைகளாகவே வாழவேண்டும்

இலங்கை-இந்தியா பிரச்னைகள் சுமுகமாகத் தீர்ந்துவிடும்

நுவரேலியா, டிச 7

இந்திய வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில் இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு வி. வி. கிரிக்கும், இந்தியன் காங்கிரஸ தலைவர் திரு எஸ. தொண்டமானுக்கும் (பாராளுமன்ற அங்கத்தினர்) நகர மண்டபத்தில் ஓர் வரவேற்பு உபசாரம் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு எச். பி. புட்டானி திரு கிரிக்கும் திரு தொண்டமானுக்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தார்

அப்பொழுது திரு கிரி பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்.

இலங்கை-இந்தியா பிரச்னைகள் சுமுகமாகத் தீர்ந்துவிடும் காலம் நெருங்கிவிட்டது. அவைகளை இப்பொழுது வெகு சுலபமாகத் தீர்த்துவிட முடியும். இரு நாடுகளும் அப்பிரச்னைகள் இனி கிளம்பாதபடி சமரஸமாக ஒரே அடியாகத் தீர்த்துவிடும். இலங்கை ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் அங்கம்வகிக்கப் போகிறது. அப்பொழுது இலங்கையும இந்தியாவும் அருகருகே அமர்ந்து உலகப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஐக்கியமாக வேலைசெய்யும் இப்பொழுது இந்தியாவின் பிரதிபிம்பங்களாக விளங்கும் காந்திஜியும் நேருஜியுமே இலங்கையிலுள்ள இந்தியர் இரட்டைப் பிரஜா உரிமையைக் கோரக்கூடாதெனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர். ஆகவே இலங்கையிலேயே வாழ விரும்பும் இந்தியர்கள் இலங்கைப் பிரஜைகளாகவே இருக்கத் தீர்மானிதது விட்டார்கள். இதைப்பற்றிய பிரச்னையே கிடையாது. இறுதியாகப் பிரச்னைகளை ஒரே அடியாக சமரசமாகத் தீர்த்துக்கொள்ள இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ. சேனநாயக்கா அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது அரிய திறமையை உபயோகித்து பண்டித நேருவுடன் பரஸ்பரம மனம் திறந்து பேசி முடிவுசெய்து வருவார் என்று நம்புகிறேன்.

திரு தொண்டமான் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:-

இலங்கையின் ஒற்றுமைக்கு விரோதமான எவ்வித செயலையும் இலங்கை இந்தியர் எதிர்ப்பார்கள். இரு நாடுகளின் தலைவர்களும் கூடிய சீக்கிரம் சந்தித்து இலங்கை - இந்தியா பிரச்னைகளைத் தீர்க்கப் போவதைக் குறித்து சந்தோஷமடைகிறேன். திரு கிரி, திரு சேனநாயக்கா ஆகியோர் முயற்சியால் திருப்திகரமான முடிவு ஏற்படுமென்று கருதுகிறேன்.

இலங்கையிலுள்ள இந்தியாவின் வர்த்தக பிரதிநிதி பேசிய போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஏற்கெனவே நெருங்கியஉறவுஎக்காலத்துமிருந்து வருகிறதென்றும் இப்பொழுது இருநாடுகளின் தலைவர்கள் சந்திக்கப்போவதால் அந்த உறவு மேலும் பல முறும் என்றும் தெரிவித்தார்.

விசாக பௌர்ணமி விடுமுறை

ஐக்கிய மாகாண சர்க்காருக்கு பௌத்தர்கள் வேண்டுகோள்

காசி, டிச. 6

சாரநாத்தில் நடைபெற்ற மூலகந்தக்குடி விஹாரையின் 16-வது வருடாந்தக் கொண்டாட்டக் கூட்டத்தில், விசாக பௌர்ணமியன்று சர்க்கார் விடுமுறை அளிக்க வேண்டுமென கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்திற்கு பர்மா, திபேத், நேபாளம், சிட்டகாங், சைனா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து 500 பௌத்தர்கள் வந்திருந்தார்கள். இந்தியாவிலுள்ள பர்மா ஹை கமிஷனர் உவின் னும், மாஸ்கோ சர்வ கலாசாலை பேராசிரியர் ராஹுல சங்கிருத்தியாயனும் வந்திருந்தார்கள். பர்மா ஹை கமிஷனர் அந்தரங்க காரியதரிசியும் இந்திய பௌத்த பிரமுகருமான சங்கர சரண்லால் யானை மீது புனித சின்னத்தை எடுத்துக்கொண்டு ஊர்வலமாகச் சென்றார். கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவிருந்த ஐக்கிய மாகாண கவர்னர் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு தேக அசௌக்கியத்தை முன்னிட்டு வர முடியாததால் பர்மா ஹை கமிஷனர் உ வின் தலைமை வகித்தார். புத்த பிரானின் தர்மோபதேசமானது இந்தியா உலகுக்கு அளித்துள்ள வரப்பிரசாதமாகுமென்று தெரிவித்து ஸ்ரீமதி சரோஜினி வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். இந்தியாவிலுள்ள சீன ஸ்தானிகர் லூயன், இலங்கைப் பிரதிநிதி திரு எம். டபிள்யூ எச். டி. சில்வா, இந்திய சர்க்கார் கல்வி மந்திரி மௌலானா அபுல்கலாம்ஆசாத், பீகார் கவர்னர், பீகார் மந்திரிகள் ஐக்கிய மாகாண மந்திரிகள் யாவரும் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியிருந்தனர். புத்த கயாவை பௌத்தர்கள் நிர்வாகத்திற்கு வழங்க வேண்டுமென்றும் ஐக்கிய மாகாண சர்வ கலாசாலைகளில் பௌத்தர்களுக்கு பாலி பாஷை படிப்பிக்க வேண்டுமென்றும் மற்றுமிரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாத்தறை, டிச. 6

நகரிலுள்ள எல்லா வீதிகளுக்கும் அந்நிய பாஷைப் பெயர்களை நீக்கி சிங்களப் பாஷை பெயர்களை இடுவதற்காக மாத்தறை நகர சபை ஒரு கமிஷனை நியமித்திருக்கிறது.

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ. 2-00
3 மாதம்	ரூ. 6-00
6 மாதம்	ரூ. 12-00
12 மாதம்	ரூ. 24-00

மானேஜர்.

'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து௵ கார்த்திகை௴ 25௳
புதன்கிழமை

இலங்கையின் சுகாதாரம்

மக்கள் நோயுற்றபின் குணப்படுத்துவதிலும் பார்க்க நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ளுவதே சாலச்சிறந்தது. சீன தேச மக்கள் இம் பணிமொழிகளை நன்கு பேணி வருகிறார்கள். அவர்கள் பிணியால் வருந்தாத காலங்களில்தான் வைத்தியர்களுக்கு வேதனம் கொடுப்பார்களாம்! ஆகவே சீன வைத்தியர்கள் மக்களுக்கு நோய் ஏற்படா வண்ணம் தக்க பாதுகாப்புகளைச் செய்யவேண்டியதாகின்றது. இலங்கை இந்த முறையில் மிகவும் பின்னணியில் நிற்கின்றது. இங்குள்ள டாக்டர்கள் நோயைக் குணப்படுத்துவதையே விரும்புகிறார்கள். நோய் வராமல் தடுக்கும் வேலைகளைச் செய்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன என்று எவரும் யோசிக்கக்கூடும். சமீபத்தில் நடந்த விஞ்ஞான மகாநாட்டில் அரசாங்க வைத்தியப்பகுதித் தலைவர் டாக்டர் எஸ். எவ் செல்லப்பா "பிணியைக் குணப்படுத்தினால் போதிய பணத்தைக் கொடுக்கும், அதனால்தான் டாக்டர்கள் நோயைத் தடுக்கும் வேலைகளில் இறங்க விரும்புவதில்லை" என்று காரணம் கற்பித்திருக்கிறார். டாக்டர் செல்லப்பா சொல்லுவது அவரது அனுபவத்திற் கண்ட உண்மையாகும்.

ஒரு தேசத்தின் சுகாதாரம், அத்தேசமக்களின் வாழ்க்கைத் தரத்தையும், கல்வியையும், சுகாதார சேவைப் பகுதியின் திறமையையுமே பெரிதும் பொறுத்திருக்கின்றது. இலங்கையில் இம்மூன்று பிரிவும் இன்னும் தாழ்ந்த நிலையில்தான் இருக்கின்றன. இதன் மேலாக அரசாங்க சேவையிலுள்ள டாக்டர்களில், நோயைக் குணப்படுத்தும் டாக்டர்களுக்கே அதிக சம்பளமும் கொடுக்கப்பட்டு வருகிறது. இவர்கள் தம் சொந்தமாகவும் வைத்தியம் செய்து பணம் தேடியும் கொள்ள வசதிகளுண்டு. தடுப்பு வேலைப் பகுதியிலுள்ள சுகாதார டாக்டர்களுக்கு வேதனம் குறைவு. சொந்தத்தில் வைத்தியம் செய்ய நேரமும் இடமும் கிடையாது. இதை அனுபவத்தில் கண்டுதான் டாக்டர் செல்லப்பா மகாநாட்டில் இருபகுதி டாக்டர்களுக்கும் ஒரே விதச் சம்பளம் ஏற்படுத்த வேண்டுமென்று ஆலோசனைசொல்லியுள்ளார். இந்த நல்ல யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதன் பின்பு எந்த டாக்டர்களும் குணப்படுத்தும் வேலையையோ, தடுக்கும் வேலையையோ செய்வதற்குப் பின் நிற்க மாட்டார்கள். அத்துடன் அரசாங்க டாக்டர்கள் தம்சொந்தத்தில்வைத்தியம் செய்வதையும் நிறுத்திவிடல் வேண்டும். குடியேற்ற மந்திரி காரியாலயத்தில் பிரதம டாக்டராக இருக்கும் டாக்டர் டபிள்யூ. எச் கோன்ட்ஸ் இங்கு விஜயம் செய்தபொழுது, டாக்டர்கள் தம் சொந்தத்தில் வைத்தியம் செய்ய உரிமையின்றி அவர்களுக்கு முழுநேரச் சம்பளம் கொடுக்கப்படல் வேண்டும் என்று கூறியிருக்கிறார். இந்த யோசனையை நடைமுறையில் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

பிரான்ஸில் வேலை நிறுத்தம் முடிகிறது

அநேகர் வேலைஸ்தலத்துக்கு திரும்புகின்றனர்

பாரிஸ், டிச 8

இப்போ 3 வாரமாக நடந்த கைத்தொழிலாளர் வேலைநிறுத்தத்தால் பிரான்ஸில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் சமூகத்திற்கு ஏற்பட்ட இன்னல்களும் படிப்படியாக குறைந்து வருகின்றன.

தடைசெய்வோரை இராணுவத்திலுள்ளோர் கலைத்துவிட்டதால் பெருந்திரளான நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் வேலைக்குத் திரும்புகின்றனர்.

தேசம் முழுவதும் வேலைக்குத் திரும்பும் நோக்கம் அநேகரிடம் இருப்பதால் தொழிலாளர் சங்கத்தார், பிரதமர் ஷுமனுடைய அரசாங்கத்தோடு சமரசம் செய்ய எத்தனிக்கிறார்கள். பல இலாகாக்களிலுள்ள சிவில் உத்தியோகஸ்தர் வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

அநேக உபாத்தியாயர்களும் வேலை நிறுத்தஞ் செய்ததால் 2 வாரமாக மூடப்பட்டிருந்த பள்ளிக்கூடங்களும் அநேகமாக வழக்கம்போல் திறக்கப்பட்டிருக்கின்றன.

இப்படி அநேகர் வேலைக்குத் திரும்புவதின் காரணம் யாதெனில் எப்படியாவது டிசம்பர் 10-ம் உ புதன்கிழமை எவ்வகை வேலை நிறுத்தமும் ஒழியவேண்டுமெனப் பிரான்ஸ் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையே. அப்படியில்லாவிட்டால் வேலைநிறுத்தஞ்செய்வோருக்கெதிராகத் தீவிர நடவடிக்கைகள் எடுப்பதாகவும் கூறப்பட்டது. (ராய்ட்டர்)

பாதுகாப்புச் சட்டங்களை நீடிக்காதே!

தாழ்ந்த பிரதேச விளை பொருள் சங்கத்தின் தீர்மானம்

கொழும்பு, டிச. 9

தாழ்ந்த பிரதேச விளை பொருள் சங்கத்தின் நிர்வாக சபை ராணுவத்தினரால் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தங்கள் உபயோகத்திற்காக எடுக்கப்பட்ட நிலபுலன்கள் எல்லாவற்றையும் அவற்றின் சொந்தக்காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று கோரி ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அங்ஙனம் திருப்பிக் கொடுப்பதில் கஷ்டம் ஏற்படும் காணிகளை அரசாங்கத்தின் நிலம் பெறும் திட்டத்தின்கீழ் விலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் மேற்படி நிர்வாகசபை தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச் சட்டங்களை நீடிக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆலோசித்து வருவது பலமான கண்டனங்களுக்காளாகியது. இதுசம்பந்தமாக பிரதம மந்திரியாரைப் பேட்டிகாண ஓர் தூதகோஷ்டி அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மீன் பிடித்தொழில் மீது வரி

கொழும்பு, டிச. 9

மீன் பிடித் தொழில் சம்பந்தமான ஆலோசனைக் கமிட்டி சமீபத்தில் சில முக்கிய விஷயங்களை ஆலோசிக்க இருக்கிறது.

அவற்றில் ஒன்று மீன்பிடித் தொழில் மீது 20 லட்சம் ரூபாய் வரி விதிப்பதாகும். இங்ஙனம் வசூலிக்கப்படும் பணம் சமீபத்தில் மீண்டும் புகுத்தப்படவிருக்கும் மீன் வகைக் கட்டுப்பாட்டுச் செலவுகளுக்காக உபயோகிக்கப்படும். மீன் விற்பனையையும் விநியோகத்தையும் ஒரு விசேஷ உதவிக் கமிஷனரின் கீழ்விற்பனவு வசதி இலாகாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் ஒரு ஆலோசனை உள்ளது.

புகுத்தப்படவிருக்கும் இத்திட்டம் காலாந்தரத்தில் மீன் பிடித் தொழிலைத் தேசிய மயமாக்கும் ஓர் திட்டமாக இருக்குமாம்.

கொழும்பு டிச. 9

மாவனெல்லை கண்டி ரோட்டைச் சேர்ந்த எம். ஏ. ஸி. பக்கீர் மொஹிதீன் 38 கொத்து நாட்டரிசி கடத்தியது சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் அவர் மீது ரூ. 200 அபராதம் விதிக்கப்பட்டது.

ஆசிய நாடுகளின் ஐக்கியம் அவசியம்

அவசிய உணவுகள் மீது வரி விதிப்பு

கொழும்பு நகர சபையின் கண்டனம்

கொழும்பு, டிச. 9

வெண்ணெய், வெண்ணெய்க் கட்டி, பழ வகைகள் ஆகிய அவசிய உணவுப் பொருட்களில் வரி விதித்துள்ளதை எதிர்த்து கொழும்பு முனிசிப்பல் சபை ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இத்தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசிய குப்பனித்தெரு பகுதி அங்கத்தினர் டாக்டர் குமாரன் ரத்தினம் குறிப்பிட்டதாவது:-

"வாழ்க்கையின் இரு முக்கிய தேவைகள் உணவும் உடையுமாகும். புதிய வரி ஆலோசனைகள் வருமுன் உள்ள நிலையில் கூட, பாடுபடும் பாட்டாளிகளுக்கு அவற்றைப் பெற்றுக்கொள்வது இலகுவாய் இருக்கவில்லை. இந்த நிலைமையில் வெண்ணெய், வெண்ணெய்க் கட்டி, கனி வகைகள்மீது வரி விதிப்பது அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் ஒன்றுபோலவே வெண்ணெய், வெண்ணெய்க் கட்டி ஆகியவை இன்றியமையாதவை. ஏனெனில் விட்டமின் ஏ. பி எனனும் இரு ஜீவ சத்துகளும் இவற்றில் அதிகமாகக் காணப்படுகின்றன. வர்த்தக மந்திரியார் வெண்ணெய்க்குப் பதிலாக சீனிச்சம்பலை உபயோகிக்கலாம் எனக் குறிப்பிட்டார். இது அவரது அளவுகடந்த அறியாமையையே காட்டுகிறது. இன்று மக்கள் உணவு போதிய போஷாக்கின்றி நாட்டின் சுகவாழ்வையே உறிஞ்சித் தொலைக்கிறது. இந்த நேரத்தில் அவசிய உணவுகளில் வரி விதிப்பது நிலைமையை அதிகச் சீர்கெடுத்துவிடும். தேக சௌக்கியம் என்பது விலைக்கு வாங்கப்படக்கூடியவஸ்துவே. அதற்காக அரசாங்கம் என்ன விலைகொடுத்தாலும் தகும். திரு. பண்டாரநாயகா நாட்டைப் பிடித்த பிணி கம்யூனிஸமல்ல, வறுமையும் அழுக்குமே; வாட்டிவரும் நோய்கள் எனக் குறிப்பிட்டார். இப் பிணிகளைப் புதிய வரிகள் மேலும் வளர்க்க அனுகூலமாகும் என நான் அஞ்சுகிறேன்."

இதன் பின் டாக்டர் ரத்னத்தால் இதுசம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பின் திரு. எம். ஜி மெண்டிஸ் நகரசபை கமிட்டிகளில் தலைமைப் பதவி வகிக்கும் நபர்கள், மத்திய அரசாங்கத்திலும் நிர்வாகப் பதவி வகிப்பதால் இதற்கு விசுவாசமாய் நடப்பதா அதற்கு விசுவாசமாய் நடப்பதா என்ற பிரச்னை கிளம்புகிறது ஆகவே இரண்டில் ஒன்றை ராஜினாமாச் செய்யவேண்டும் என்று ஓர் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

இதன்பேரில் காரசாரமான விவாதம் நடைபெற்றது. அபூபக்கர், ஜீவேந்திரசிங்கா ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்தனர். லெஸ்லி பெரேரா, எம். எப். கனி, டபிள்யூ. ஏ டி ராமநாயக்கா ஆகியோர் எதிர்த்துப் பேசினார்கள்.

அதன் பின் டிசம்பர் 15-ம் தேதிக்குக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

பிரிட்டிஷ் நிபுணர்கள் அறியாமை

ரஷிய நிருபர்கள் கூற்று

மாஸ்கோ, டிச. 8

நாலு தேச வெளிநாட்டு மந்திரிகளும் கூடி எக்காரியத்திலும் முடிவுக்கு வராமைக்குக் காரணம் ரஷியாவே என பிரிட்டிஷ் நிபுணர்கள் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியிடுவது அவர்களின் அறியாமையால்தான் என 'பிரவ்டா' என்னும் ரஷிய பத்திரிகை நிருபர் கூறுகிறார்.

அப்படி அவர்களின் அறியாமைக்குக் காரணம் பிரிட்டிஷ் அந்நியநாட்டிலாகாவின் பொறுப்பு என்றும் கூறினார். (ராய்ட்டர்)

இன்றேல் மீண்டும் மேனாட்டுக்கு அடிமையாவோம

பரஸ்பர உறவும், ஒத்துழைப்பும், ஒற்றுமையும் ஏற்படுத்த பர்மா பிரதம மந்திரி வேண்டுகோள்

மலேயா, இந்தோசைனா, இந்தோனேஷியா நிலைமைகள்

கல்கத்தா, டிச. 8

'சுதந்திரம் அடைந்துள்ள ஆசிய நாடுகளும் சுதந்திரம் பெறவிருக்கும் ஆசிய நாடுகளும் தங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ளாவிடில் மீண்டும் அந்நியர் ஆதிக்கத்திற்குள்ளாகும்படி நேரிடும். நமக்குள்ளே ஐக்கியமில்லாதிருந்துவந்தபடியால்தான் நாம் இதுவரை மேனாட்டாருக்கு அடிமைகளாக இருந்தோம்.

'ஆசிய நாடுகளின் தலைவர்கள் ஒருவரையொருவர் அடிக்கடி சந்தித்து பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்து நேசபான்மையையும் ஒற்றுமையையும் ஆசிய நாடுகளுக்கிடையே ஏற்படுத்த வேண்டும். ஆசிய நாடுகளிலுள்ள பேராசிரியர்களும், கலைவாணர்களும், யாத்ரீகர்களும் பரஸ்பரம் ஒரு ஆசிய நாட்டிலிருந்து மற்ற ஆசிய நாட்டுக்குச் சென்று ஆசியாவின் பூர்வீக கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் ஐக்கியமான முறையில் அபிவிருத்தி செய்ய முயற்சிக்கவேண்டும்.

'பர்மிய சர்வகலாசாலைகளில் இந்திய மாணவர்கள் வந்து படிக்கும்படி நான் அவர்களை வரவேற்கிறேன். இந்தியாவும் அவ்விதமே பர்மிய மாணவர்களை இந்திய சர்வகலாசாலைகளில் கல்வி பயில வரவேற்க வேண்டும். அப்பொழுது இரு நாடுகளும் பரஸ்பரம் ஒன்றையொன்று தெரிந்து இரு நாடுகளுக்குமிடையே ஒற்றுமையை நிறுவ உதவியாக இருக்கும்.

நேற்று மாலை கல்கத்தாவிலுள்ள மகாபோதி சங்கத்தார், டில்லியிலிருந்து ரங்கூன் திரும்பிச் செல்லும் மார்க்கத்தில் இங்கு தங்கிய பர்மா பிரதம மந்திரி தக்கின் நு வுக்கும் பர்மா அந்நியநாட்டு மந்திரி ஊ டின் டுட்டுக்கும் வரவேற்பு அளித்தபோது பர்மா பிரதம மந்திரி மேற் குறிப்பிட்டவாறு தெரிவித்தார். இருவரும் நாளை காலை ரங்கூனுக்குப் பயணமாகிறார்கள்.

இந்தோனேஷிய விவகாரம்

பட்டேவியா, டிச. 8

டச்சு-இந்தோனேஷிய தகராறு சம்பந்தமாக இன்று பட்டேவியா துறைமுகத்திலுள்ள அமெரிக்க யுத்தக் கப்பலில் சமரசப் பேச்சுகள் ஆரம்பமாயின.

ஐக்கிய தேச பாதுகாப்பு கவுன்ஸில் நியமித்த அமெரிக்க பெல்ஜிய. ஆஸ்திரேலிய பிரதிநிதிகளடங்கிய மூவர் கமிஷனும் இந்தோனேஷிய பிரதிநிதிகள் கோஷ்டியும் டச்சு பிரதிநிதிகள் கோஷ்டியும் கூடியிருந்தார்கள்.

இரு பிரதிநிதி கோஷ்டிகளின் தலைவர்களும் ஒத்துழைப்பும் நன்னம்பிக்கையும ஏற்படவேண்டிய அவசியத்தைக் குறித்துப் பேசினார்கள்.

சமரசம் ஏற்படுவதற்கு இருந்துவரும் கஷ்டங்களைக் குறித்து மூவர் கமிஷன் அங்கத்தினர்கள் பேசினார்கள்.

நாளை மூவர் கமிஷனும் இரு பிரதிநிதி கோஷ்டிகளின் நிர்வாகக் கமிட்டிகளும் சேர்ந்த ஓர் கூட்டம் நடைபெறும்.

மலேயா கவர்னர் ஜெனரல் லண்டனுக்குப் பறப்பார்

லண்டன், டிச. 8

மலேயாவில் புதிய அரசியல் திட்டத்தின்படி சமஷ்டி சர்க்காரை ஏற்படுத்துவதுபற்றி பிரிட்டிஷ் சர்க்காருடன் கலந்துபேச மலேயா கவர்னர் ஜெனரல மால்கம் மக்டொனல்ட் அடுத்த மாத ஆரம்பத்தில லண்டனுக்குப் பறந்து செல்வார். இப்புதிய திட்டம் ஜனுவரி முதல் தேதி அமுல் செய்யப்படும்.

மலேயா பொது மக்கள் முக்கியமாக சீனர்கள் இப்புதிய திட்டத்தைப் பலமாக எதிர்த்து வருகிறார்கள்.

பிரெஞ்சு ஹைகமிஷனர் பறக்கிறார்

பாரிஸ், டிச. 8

இந்தோ சைனாவின் எதிர்கால அரசியல் நிலைமைபற்றி ஹாங்காங்கிலிருந்து வந்த அன்னம் மாஜிமன்னர் பாவோடாயுடன் டொங்கின் கடற்கரையில் பிரெஞ்சு யுத்தக் கப்பலில் சந்தித்துப் பேசிவிட்டு சைகோன் திரும்பிய இந்தோ சைனாவின் பிரெஞ்சு ஹை கமிஷனர் திரு எமில பொல்லார்ட் இச் சம்பாஷணைபற்றி பிரெஞ்சு சர்க்காருக்கு தெரிவிக்க இன்று பாரிஸுக்குப் பறந்து செல்கிறார்.

இந்தோ சைனாவுக்கு பிரான்ஸிலிருந்து சென்றுகொண்டிருந்த துருப்பு கப்பலிலிருந்து கடலில் குதித்து தப்பியோட முயன்ற 18 பிரெஞ்சு சோல்ஜர்களில் 17 பேர்கள் கடலில் மூழ்கியிருக்கவேண்டும் அல்லது சுமத்திரா தீவுக்கு நீந்திக் கரை சேர்ந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. கப்பல் மலாக்கா கடலில் சென்றுகொண்டிருக்கும்போது கடலில் குதித்த 18 பேர்களில் ஒருவரை மலேயா படகுக்காரர்கள் இழுத்துவந்து மலேயா கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர். அவர் மலேயாவிலுள்ள பிரெஞ்சு அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டார். (ராய்ட்டர்)

பாணந்துறையின் மின்சார வசதி

நகர சபையின் முயற்சி

பாணந்துறை, டிச. 9

பாணந்துறை நகரசபை புதிய மின்சார யந்திரங்களை விலைக்குவாங்கியுள்ளது. இதன் காரணமாக நகரில்யுத்தத்திற்கு முன் இருந்ததுபோல் தெரு விளக்குகள் ஏற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தங்கள் வீடுகளுக்கு மின்சார விளக்குகளைப் பெற்றுக்கொள்ள நீண்டநாட்களாகக் காத்திருந்த பலர் இனிமேல் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என நம்பப்படுகிறது.

கொட்டாஞ்சேனை கொலை வழக்கு

மேலும் இருவர் சாட்சியம்

கொழும்பு, டிச. 9

கொட்டாஞ்சேனை காலேஜ் வீதிக் கொலை வழக்கின் விசாரணை திங்கட்கிழமை தொடர்ந்து நடைபெற்றபோது டபிள்யூ. ஏ. தாய்ஹாமி, எல் பி. ஹினிஹாமி என்பவர்கள் சாட்சியம் அளித்தனர்.

மேற்படி வழக்கில் ஜி டி. எஸ் செனிவரத்ன என்பவரைக் கொலை செய்தது சம்பந்தமாக நுகயகொடையைச் சேர்ந்த தர்மசேன என்பவரும் காலம் சென்றவரின் மனைவி பீட்ரிஸ் மோட் செனிவரத்னவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

விசாரணை டிசம்பர் 22-ம் தேதியன்று தொடர்ந்து நடைபெறும்.

பர்மாவாழ் இந்தியர்

பர்மா பிரஜா உரிமை பெற்றால் வித்தியாசம் இருக்காது

இந்திய பிரஜா உரிமை விரும்புவோர் அந்நியராவர்

காசி, டிச. 6

"பர்மாவில் நிரந்தரமாகக் குடியேறி வாழ விரும்பும் எல்லா இந்தியர்களுக்கும் பர்மாவின் பிரஜா உரிமை வழங்கப்படும். அப்படி பர்மா பிரஜா உரிமை பெற்ற இந்தியர்களுக்கும் பர்மிய பிரஜைகளுக்குமிடையே அரசாங்கம் எவ்விதமான வித்தியாசங்களையும் பாராட்டாது. பர்மாவிலேயே குடியிருந்துகொண்டு இந்திய பிரஜைகளாக இருக்க விரும்புவோர் அந்நியர்களாகவே பாவிக்கப்படுவார்கள்" என்று இங்கு விஜயம் செய்திருக்கும் பர்மா பிரதம மந்திரி தக்கின் நூ பத்திரிகா நிருபரிடம் தெரிவித்தார். பர்மா பிரதமர் தக்கின் நூவும் பர்மா அந்நிய நாட்டு மந்திரி ஊடின்டுட்டும் டில்லியிலிருந்து ரங்கூன் திரும்பும் மார்க்கத்தில் சாரநாத்துக்குவிஜயம் செய்துவிட்டு இன்றுமாலை புத்தகயாவுக்குச் செல்கிறார்கள். அவர்கள் ராஜகிரியிலுள்ள நாலந்தா சர்வகலாசாலைக்கும் விஜயம் செய்துவிட்டுகல்கத்தாவுக்குப் பயணமாவார்கள்.

இந்தியா

மின்சார உற்பத்தி-விநியோகம் தேசீய மயம்

10 லட்சம் டன் உருக்கு உற்பத்திசெய்யும் இரு பெரும் தொழிற்சாலைகள்

சோவியத் ஸ்தானிக காரியதரிசி டில்லி வந்து சேர்ந்தார்

கல்கத்தா, டிச 8

இந்திய சர்க்கார் சுகாதார மந்திரி ஸ்ரீமதி அமிர்தகௌரியின் சகோதரரும் தென்னாப்பிரிக்காவில் இந்திய ஹை கமிஷனராக இருந்தவருமான ராஜா சர் மகாராஜாசிங் ஐக்கியதேச பொதுச் சபைக் கூட்டத்திற்கு இந்திய பிரதிநிதி கோஷ்டியில் ஒருவராகச் சென்றுவிட்டு இன்று நியூயார்க்கிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார். அவர் பத்திரிகா நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:- ஐக்கியதேச தர்மகர்த்தா கமிட்டியில் சென்ற வருடமும் இந்தவருடமும் நான் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன். அக்கமிட்டி நடவடிக்கைகளில் இந்தியா தனது முன்னேற்றமான மனப்பான்மையைப் பிரதிபலித்துக் காட்டியது. ரஷியா, அராபிய நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், பாகிஸ்தான், சில தென்னமெரிக்காநாடுகள் இவைகளடங்கிய கோஷ்டியுடனேயே இந்தியாவும் சேர்ந்து வாக்களித்தது. எங்களுக்கு விரோதமான கோஷ்டியில பிரிட்டன், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள், அநேக தென்னமெரிக்க நாடுகள், அமெரிக்கா ஆகிய நாடுகளிருந்தன.

இந்த வருடமும் இந்திய பிரதிநிதி கோஷ்டித் தலைவி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தனது திறமையையும் தீர்க்க அறிவையும் ஐக்கியதேச சபையில் நிலைநாட்டினார். அவருக்கு உதவியாக இந்திய பிரதிநிதி கோஷ்டியில் பல நிபுணர்களிருந்தார்கள்.

டில்லியில் சோவியத் ஸ்தானிகம்

புதுடில்லி, டிச. 8

டில்லியில் நிறுவப்படும் சோவியத் ஸ்தானிகாலயத்தைச் சேர்ந்த முதல் காரியதரிசியும் அவர் மனைவியும் மற்றுமுள்ள சிப்பந்திகளும் இன்று இங்கு வந்து சேர்ந்தனர். சோவியத் ஸ்தானிகர் இன்னும் இருவாரங்களில் வந்து சேருவார்.

பிரெஞ்சு ஸ்தானிகர்

இந்தியாவில் பிரெஞ்சு ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட திரு டானியல் லெவி இன்று இங்கு வந்து சேர்ந்தார்.

சீன ஸ்தானிகர்

கல்கத்தா, டிச. 8

இந்தியாவில் சீன ஸ்தானிகராகவுள்ள டாக்டர் லோ சியா லுவன் சைனாவிலிருந்து டில்லிக்குச் செல்லும் மார்க்கத்தில் இன்று இங்குவந்து தங்கினார். அவர் மேற்கு வங்ககவர்னரான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியரைச்சந்தித்து அவருடன் சர்க்கார் மாளிகையில் விருந்துண்டார்.

மின்சார உற்பத்தி தேசிய மயமாகிறது

புதுடில்லி டிச. 8

மின்சாரம், சுரங்கம், மராமத்து ஆகிய இலாக்காக்களின் மந்திரி திரு என். வி. கட்கில் இந்தியா பாராளுமன்றத்தில் கொண்டுவந்த மின்சார உற்பத்தி-விநியோகக் கைத்தொழில்களைத் தேசியமயமாக்கும் மசோதா இன்று பரிசீலனைக் கமிட்டியின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டது.

இரு பெரும் உருக்கு உற்பத்தி தொழிற்சாலை

ஒவ்வொன்றிலும் 5 லட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்யக்கூடிய இரு பெரும் உருக்குத் தொழிற்சாலைகளை நிறுவ இந்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருவதாக இன்று இந்தியா பாராளுமன்றத்தில் கைத்தொழில் மந்திரி டாக்டர் சியாம் பிரசாத் முக்கர்ஜி தெரிவித்தார்.

இந்தியாவில் உணவு இறக்குமதி

சர்வதேச உணவு கவுன்ஸில் இந்தியாவுக்கு 1948-ம் வருடம் முதல் 6 மாத காலத்திற்கு 3 லட்சத்து 90 ஆயிரம் டன், அரிசி ஒதுக்கியிருக்கிறது. 1947-ம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த உணவு தான்யங்கள் 26 லட்சம் டன் இதில் நவம்பர் முடிய 20 லட்சத்து 48 ஆயிரம் டன் உணவு தான்யம இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

பீகானீர் சமஸ்தான சீர்திருத்தம்

பீகானீர், டிச. 8

தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கிய சட்ட சபைக்குப் பொறுப்புள்ள நிர்வாக சபைக்கு சமஸ்தான ஆட்சியை மாற்றும் அரசியல் சீர்திருத்தத் திட்டத்தை பீகானீர் மகாராஜா பிரகடனம் செய்திருக்கிறார். தனது அரண்மனை, பந்துக்கள், தேவஸ்தானம், ராணுவம் முதலிய விஷயங்கள் மன்னரின் நேரடியான நிர்வாகத்திலிருக்கும்.

கிழக்கு பஞ்சாப்பில் பருத்தி ஏற்றுமதிக்கு தடை

சிம்லா, டிச 8

பருத்தி ஜவுளியையும் நூலையும் கிழக்கு பஞ்சாப்பிலிருந்து அனுமதியின்றி ஏற்றுமதி செய்யலாகாதென்றும் இதை மீறுகிறவர்களுக்கு 3 வருடம் தண்டனை விதிக்கப்படுமென்றும் கிழக்குப் பஞ்சாப் மாகாண சர்க்கார் அவசரச்சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள் மாகாணத்தின் சில பிரதேசங்களிலிருந்து கரும்பு ஏற்றுமதியும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

ஜுனாகத்சமஸ்தானத்திலும் ஏற்றுமதித் தடை

ராஜகோட்டை, டிச. 8

ஜுனாகத சமஸ்தானத்திலிருந்து பருத்தியை பாகிஸ்தானுக்கோ அல்லது பாகிஸ்தானுடன் சேர்ந்த சமஸ்தானங்களுக்கோ ஏற்றுமதி செய்யலாகாதென்றும், சுங்க வரி கட்டினால் இந்தியாவுக்கும் இந்தியாவைச் சேர்ந்த சமஸ்தானங்களுக்கும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுமென்றும ஜுனாகத் சமஸ்தான நிர்வாகத் தலைவர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

ரயில் விபத்தில் 7 பேர் மரணம்

கல்கத்தா, டிச. 8

இங்கிருந்து 28 மைல் தூரத்திலுள்ள கஞ்சரபாராவில் ஒரு சாமான் ரயில் வண்டியுடன் வட வங்காள எக்ஸ்பிரஸ் ரயில்

(3-ம் பக்கம் பார்க்க)

பாலஸ்தீனப் பிரிவினை பற்றி ஜெனரல் ஸ்மட்ஸ் ஆனந்தம்

பாலஸ்தீனத்திலும் ஜனமாற்றம் ஆரம்பம்

டெல் அவிவ் நகர் பற்றி எரிகிறது

ஜெருசலேம், டிச. 8

டெல் அவிவ் நகரில் வீடுகள் பற்றி எரிந்துகொண்டிருக்கின்றன. நகரின் வெளிப் பகுதிகளில் அராபியர்கள் பிரவேசித்து வருகிறார்கள். அராபியர் வெற்றியுறுவது கண்டு யூத தேசிய பாதுகாப்பு சம்பந்தமான 'ஹாகநாத்' ஸ்தாபனத்தார் அதிகமான துருப்புகளை வரவழைக்க அவசரச் செய்திகளை அனுப்பினர். இதர பிரதேசங்களிலுள்ள யூதத துருப்புகள் டெல் அவிவுக்கு விரைந்து வருகிறார்கள்

இதற்கு முன்னதாக டெல் அவிவ் நகருக்கும் ஜாவா நகருக்குமிடையே யூதர்களுக்கும் அராபியர்களுக்கும பீரங்கி யுத்தங்கள் நடைபெற்றன.

அராபியர்கள் யூதர் நகரான டெல் அவிவ் நகருக்குள் முன்னேறுகின்றனர். டெல் அவிவ் நகரில் ஹத்திக்குவா பகுதியிலுள்ள யூத பெண்களும் குழந்தைகளும் வீடுகளைக் காலி செய்து வெளியேறிவருகின்றனர். யூதலொறிகளிலும் மோட்டார்களிலுமாக யூதப் பெண்களும் குழந்தைகளும் அணியணியாக வெளியேற்றப்படுகின்றனர். வெளியிடங்களிலிருந்து யூதத் துருப்புகளும் போக்குவரத்து சாதனங்களில் ஏராளமாக டெல் அவிவ் நகருக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

நேற்று பாலஸதீனத்தில் பல இடங்களில் நடைபெற்ற கலகங்களில் 9 யூதர்கள் 5 அராபியர்கள் 2 பிரிட்டிஷார் மாண்டனர்.

நதானியா கடற்கரைப்பகுதியிலுள்ள அராபிய கிராமங்களிலிருந்து அராபிய குடும்பங்கள் சமான் தட்டுமுட்டுகளுடன் நெபுலஸுக்கும் ஜெனினுக்கும் போய் குடியேற வெளியேறுகின்றனர். அவர்கள் எல்லோரும் வீடுகளைக்காலி செய்துகொண்டு லொறிகளிலும் வண்டிகளிலும் ஏறிச்செல்கிறார்கள்.

அராபிய லீக்

கெய்ரோ, டிச. 8

இன்று கொய்ரோவில் அராபிய லீக் கூட்டம் நடைபெற்றது. வாளெடுத்து அராபியர்கள் போர்புரிய வேண்டுமென்று கிராண்ட் முப்தி கூறினார். மூன்று மணிநேரம் கூட்டம் நடைபெற்றது. லெபானனில் 7 அராபியநாடுகள் செய்த தீர்மானத்தை நிறைவேற்றும் உபாயங்களைப்பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. முடிவான நடவடிக்கை எடுப்பது பற்றி மேலும் விவாதம் நடைபெறும.

டமஸ்களில் பாலஸ்தீன போட்டி சர்க்கார் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், பிரிவினையை எதிர்க்கும் பிறநாடுகளிலிருந்து வரும் தொண்டர் படைகளின் போர்த் திட்டம் வகுக்கப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது. இத் தொண்டர்களின் முதலாவது படை டமஸகளில் வந்து சேர்ந்திருப்பதாகவும் அராபிய லீகின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

யூதர் குடியேற்றம்

நியூயார்க், டிச. 8

அடுத்த 10 வருடங்களில் 10 லட்சம் யூத அகதிகளைக் கொண்டுவந்து பாலஸதீனத்தில் குடியேற்ற யூதர் சபை திட்டம் போட்டிருக்கிறது என்று அந்த சபையின் பொக்கிஷதாரான கட்ளான் தெரிவிக்கிறார். அவர் ஜெருசலேமிலிருந்து சென்றவாரம இங்கு வந்திருக்கிறார்

பிரிட்டன் வெளியேற்றம்

ஜெருசலேம், டிச. 8

பாலஸதீனத்தில் முக்கியமான இடங்களிலிருந்து டிசம்பர் 15-ந் தேதி முதல் பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறுமென்று தெரிகிறது.

ஏடன் நிலைமை

ஏடன், டிச 8

ஏடனில் இன்னும் வீடுகள் எரிந்துகொண்டிருக்கின்றன அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இங்கு 5 தினங்களாக கலகங்கள் நடைபெற்றன. பெரிய பஜார் நாசமாகிவிட்டது. வீடுகள் தரைமட்டமாயின. யூதர் ஸ்தலங்களை பிரிட்டிஷ் துருப்புகள் வளைந்து பாதுகாவல் செய்து வருகின்றன. சில யூதர்கள் எரிட்ரியிலுள்ள அஸமரா நகருக்கு ஏடனிலிருந்து கப்பலேறிச் செல்கிறார்கள்.

ஐக்கிய தேச பாலஸதீனக் கமிஷன் வருவதைத் தாமதப்படுதத அராபிய மேல் கமிட்டி முயற்சிப்பதற்காகவும் அராபியர்கள் பலத்தைத் திரட்டுவதற்கு இந்த சூழ்ச்சி செய்யப்படுவதாகவும யூதர் சபை அறிவிக்கிறது. அராபியர்கள் லண்டனிலுள்ள அந்நிய நாடுகளின் ஸதானிகாலயங்களிலும், அமெரிக்காவிலும், பாதுகாப்பு கவுன்ஸில் வட்டாரங்களிலும் பிரிட்டிஷ் அந்நியநாட்டுக் காரியாலயததிலும், அமெரிக்க அந்நிய நாட்டுக் காரியாலயத்திலும உளவறிந்துவருவதாகவும் அச்சபை தெரிவிக்கிறது.

யூதர்களும் அராபியர்களும் தங்கள் ஊர்களைப் பாதகாதது சமாதானத்தை நிறுவுகிறார்களா என்பதைப் பரீட்சிக்கும் பொருட்டு டிசம்பர் 15-ம்தேதி பிரிட்டன் பாலஸதீனததில் பல முக்கிய நகர்களிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகளைக் காலிசெய்யுமென்று நியூயார்க் ஹெரால்ட் பத்திரிகையின் ஜெருசலேம் நிருபர் அறிவிக்கிறார்.

ஜெனரல்ஸமட்ஸ ஆனந்தம்

ஜோஹன்னஸபர்க், டிச. 8

பாலஸதீனப் பிரிவினைபற்றி தென்னாப்பிரிக்க பிரதம மந்திரி ஜெனரல் ஸ்மட்ஸ் மகிழ்ச்சியுறுகிறார். இங்கு நடைபெற்ற யூதர்கள் கூட்டத்தில் அவர் பேசியபோது பாலஸதீனப் பிரிவினை யூதர் சரித்திரததில் முன்னேற்றமான முக்கிய சம்பவமென்றும் இதில் வெற்றிபெற்ற யூதர்களைப் பாராட்டுவதாகவும் தெரிவித்தார். உலக யூதர் தலைவரான டாக்டர் வீஸமன் ஒரு பெரிய மனிதர் என்றும அவரால்தான் யூதர்களுக்குத் தனிநாடு கிடைததென்றும் கூறினார். (ராய்ட்டர்)

தப்பியோடிய இரு கைதிகள்

இலங்கை யெங்கும் தேட போலிஸ் முயற்சி

கொழும்பு டிச 10

வெளிக்கடை சிறையிலிருந்தும், ரயிலில் பிரயாணம் செய்யும்போது போலிஸ் பாதுகாவலிலிருந்தும் தப்பியோடிய டான் ஜேம்ஸ் விஜயரத்ன, டபிள்யூ ஏ. டான் சார்ளஸ் என்ற இரு கைதிகளைப் போலிஸார் இலங்கையெங்கும் தேடி கண்டுபிடிக்க முயற்சித்து வருகிறார்கள்.

கவர்னரின் நாய் கண்டுபிடிக்கப்பட்டது

கொழும்பு, டிச 10

கவர்னருடைய நாய் காணாமற் போய்விட்டது. அதை புறக்கோட்டை போலிசார் கண்டுபிடிகது நேற்று முன் தினம் ராணிமாளிகையில் கொண்டுவந்து விட்டனர். ஆனால் நேற்றுக்காலை அது மீண்டும் ஓடிப்போய் விட்டது. அது கொச்சிக்கடையில் சுற்றிக்கொண்டிருந்ததை புறக்கோட்டை போலிசார் மீண்டும் கண்டுபிடித்து கவர்னர் மாளிகையில் கொண்டுபோய் விட்டனர்.

இலஙகை மாஜி கவர்னர் மரணம்

லண்டன், டிச 9

இலங்கையின் மாஜி கவர்னர் சர் ரெஜினல்ட் எட்வர்ட் ஸடப்ஸ 71 வது வயதில் இன்று மரணமானார் 1910-11 வது வருடஙகளில் மலேயாவுக்கும் ஹாங்காஙகிற்கும் விசேஷ தூதுசென்றார். பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு உத்தியோகத்தில் பிரபலமாக சேவை செய்தவர். இவர் ஜமைக்கா தீவுக்கு கெப்டன் ஜெனரல்-பிரதம கவர்னராக இருந்தார். சைப்ரஸ்தீவின் கவர்னராகவும் பிரதம தளபதியாகவும் இருந்தார்.

"கார்ள் மார்க்ஸின் கடவுளில்லாக் கொள்கை"

"பழைய பாதையிலேயே போங்கள்"

பரிசளிப்பு விழாவில் கார்டினர் உபதேசம்

யாழ்ப்பாணம், டிச. 9

"உலகத்தின் தீமைகளைப் போக்குவதற்கு மதத்திலும் பார்க்க மேலான மார்க்கம் ஒன்று இருக்கிறது என்ற எண்ணம், படித்த கத்தோலிக்கரிடையே கூடப் பரவி வருகிறது. இஙஙனம் பல வாலிப உள்ளஙகள் தவறான பாதையில் இழுக்கப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் இளமையின் பொறுமை இன்மையாகும். பழமையான அனுபவத்தில் முதிர்ந்த கொள்கைகளிலும்பார்க்க நவீனமான புதிய கொள்கைகள் அதிகமாக வாலிப உலகத்தைக் கவர்ந்திழுக்கிறது."

மேற்கண்டவாறு செனட்டர் சிற்றம்பலம் ஆபிரஹாம் கார்டினர் யாழ்ப்பாணம் சென் பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:—

"ஆனால் இன்றைய பிரச்னைகளைத் தீர்க்கும் மார்க்கம் கார்ள் மார்க்ஸ காட்டிய பாதையல்ல. கார்ள்மார்க்ஸைப் பற்றியும் அவரது கடவுள் இல்லாக் கொள்கையைப்பற்றியும் பின்வரும் வசனம் சொல்லப்பட்டிருக்கிறது. "கடவுள் கிடையாது. ஆனால் கடவுளின் தீர்க்கதரிசி கார்ள்மார்க்ஸாகும்." நான் வாலிபரிடம் கத்தோலிக்க சமூக செயல் முறையைக் கிரஹித்துக்கொள்ளும்படி வேண்டுகிறேன். அத்துடன் கட்சி அரசியல்வாதத்தில் ஈடுபட வேண்டாம் என்றும் கற்றறிந்த பின்பே அரசியலில் ஈடுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று நாம் ஒரு புதிய சுதந்திர இலங்கையை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். அதன் எதிர்காலம் உங்கள் கையிலேயே இருக்கிறது. வர்க்கப் போராட்டம், பகைமை ஆகியவற்றை வளர்த்து ஜனநாயக முறையை உடைத்தெறியும் பரீட்சைகளில் ஈடுபடாதீர்கள்.

இந்நாட்டு நிர்வாகத்தைத் தனது மிகுந்த பகுத்தறிவாலும் காரிய விவேகத்தாலும் திறம்பட நடத்தியிருக்கும் திரு டி. எஸ. சேனநாயக்கா அவர்கள் நாட்டைச் சீர்கெடுக்க முனையும் இப் புதிய ஆபத்தை எதிர்த்துப் போராடுவதாகப் பிரகடனம் செய்துள்ளார். இந்தப் போரில் கிறிஸதவர்களும் காரிய விவேகமுள்ள வாலிபர்களும் எந்தப் பக்கத்தில் இருப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

தமிழ்க் கலை பழமையானதும் மிக உத்தமமானதுமாகும். அதனைப் பேணுவதற்கு இப்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆனால் அதே சமயத்தில் சர்வதேச முக்கியத்துவம் உள்ள ஆங்கிலத்தை அதிகமாகப் படிப்பதும் அவசியமாகும்"

அதி சங்கைக்குரிய டி. எம். எப். லோஸ் சுவாமியார் ஓ. எம் ஐ கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிததார்.

ஆசிரியருக்குக் கடிதம்

அரசாங்க மீன் திட்டம்

ஐயா,

மீன் பிடிக்கும் தொழில் முறையில் பல முக்கிய மாற்றங்களைச் செய்வதற்கு, மீன் பகுதி மந்திரியாரின் நிரந்தர காரியதரிசி ஊக்கமுடன் முயற்சி செய்வதாகத் தெரிகிறது. இத் தொழில் சுதேசமாக்கப்பட்டு, மீன் பிடித்தல் விற்றல் முதலாயினவற்றைத் துரிதப்படுத்துவதற்காக ஒரு வியாபார சபையும் ஆலோசனை சபையும் ஆக்கப்படவிருக்கிறது.

இலங்கைக் கூட்டுறவு மீன்பிடி சமாஜத்தின் தலைவரான டாக்டர் டி. அல்மெயிட்டன் இப்புதிய திட்டத்தை ஆமோதித்துள்ளார். அது அவரது தனிப்பட்ட அபிப்பிராயமேயாதலால், அதுபற்றி அதிகக் கவனம் செலுத்த முடியாது ஆகவே மந்திரியார் மீன்பிடித் தொழிற் சங்கங்கள் பலவற்றினதும் அபிப்பிராயஙகளை அறிதல் நன்றாகும்.

பாராளுமன்றப் பொதுமக்கள் சபையில மீன் பகுதிக்குத் தலைவராயிருப்பவரே மீன் வியாபாரம்பற்றி ஒரு திட்டம் அமைததுள்ளார். இத்திட்டம் மீன் தொழில் சுதேசமயமாக்கப்படவேண்டிய அவசியத்தைக் கூறவில்லை. ஆனால் மீன் தேவைப்படுவோருக்குப் புதிய மீன் அகப்படக்கூடிய வசதியைச் செய்வதுபற்றியும் காலத்திற்குக் காலம் தேவைக்கு அதிக மீன் அகப்படுவதைத கருவதுபற்றியுமே கூறும் இத் திட்டம் அமைப[illegible] இன்னும் சில காலங்களில் தேவைக்கு மேலாக மீன் அகப்படுவதைத் தடுக்க இஙகும் முயற்சி எடுக்கவேண்டும். இலங்கையின் மேற்குக் கரையிலும கிழக்குக் கரையிலும் அதிகமாக மீன் தேவைப்படுகிறது. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மீன் சேகரிததல், பங்கிடுதல், மத்திய காலததில் ஐஸ் இடுதல் ஆகிய விஷயஙகள சீர்திருத்தப்படவேண்டும்.

இப்பொழுது மீன் கரைக்குக் கொண்டுவருவதிலிருந்து விலைப்படும்வரை அதிக நேரம் இடையில் வீணாகிறது. மீன் விரைவில் பழுதடையுந் தன்மையுடையதால், பங்கிடுதல், ஐஸ இடுதல் ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தினாலொழிய இத்தொழில் முன்னேறும

இத்தொழிலில் கட்டுப்பாடிருத்தல் அவசியம். அரசாங்க உதவியோடு இத்தொழில்ஸதாபனங்களும் ஒத்துழைதது மீன் உணவைப் பரப்பவேண்டும் மீன்தொழில் ஸதாபனம் அனுபவமற்ற உத்தியோகஸதர் கையிலிருப்பது மிகவும் ஆபத்தானதாகும்.

இலஙகை எஙகும் மீன் பிடித்து விற்பதற்குக் கூட்டுறவு வியாபாரச் சங்கஙகளை அமைக்க அரசாஙகம் உதவி செய்யவேண்டும். இச்சஙகங்கள் அவ்வச் சங்க அஙகத்தவரது பொருளாதார நன்மைகளையும் மீன் தொழில் அபிவிருத்தியையும கவனிக்கும். அரசாஙக மீன் இலாகாவால் இச்சஙகங்களுக்கு முற்பணம் அளிக்கப்படவேண்டும். 11, 12 சத விகிதத்திற்கு மேலாகாதபடி வட்டி பெறவேண்டும். அங்கத்தவர்களுக்குக் கொடுக்கும் கடனுக்கு 20 சத விகிதத்துக்கு மேலாகாத வட்டியே எடுக்கப்படவேண்டும்.

இத்தொழிலில் வியாபாரம் ஒரே மாதிரியாக என்றும நடக்க முடியாதபடியால் நட்டம் ஏற்படுவது இயற்கை. ஐக்கிய சஙகப் பகுதி தலைவரும் மீன் இலாகாத் தலைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வரையில் நட்டத்தை ஈடுசெய்ய அரசாஙகம் உதவிசெய்யவேண்டும். இதுவரை ஐக்கிய சஙகப் பகுதியார் உதவிசெய்யவேண்டும். இவ் விஷயத்தில் எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

மீன் தொழில்பற்றி ஒரு ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும். அரசாஙகப் பகுதி நிபுணர்கள் மீனைப் பழுதடைய விடாது அதிக நாட்களுக்கு வைத்திருக்கத் தக்க முறைகளை ஆராய வேண்டும். எவ்வகை மீன்களால் நம் பொருளாதார முன்னேற்றம் துரிதப்படுமென்பதை அவசியம் அறியப்படவேண்டியது தற்போதைய மீன் இலாகா தலைவருக்கு வேண்டிய ஊக்கமும் உதவியும அளித்து, மீன் தொழில்பற்றிய அறிக்கையொன்று தயாரிக்க ஓர் சபையையும் நிர்ணயித்தால் நன்றாகும்.

திரு லசற் அவர்களும் டாக்டர் அமிர்தலிஙகம் அவர்களும் தஙகள் திறமைவாய்ந்த அறிவினால் ஒன்றுபட்டுழைத்தால் இத்தொழில் முன்னேறுமென்பது திண்ணம்.

ச. அருளப்பு,
தொக்குளாய் மீன் பிடிப்போர்
சங்கத் தலைவர்.

பரீட்சையில் ஆள்மாறாட்டம்

மாணவர் இருவருக்குத் தண்டனை

கொழும்பு, டிச 8

சமீபத்தில் நடைபெற்ற ஆங்கில எஸ். எஸ். ஸி. பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சைத்தாளுக்குப் பதிலெழுதியது சம்பந்தமாக இரு மாணவர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். அவர்கள் கம்பஹாவைச் சேர்ந்தசந்திர ரத்னேபதவத்தை விதானே, பலப்பிட்டியாவைச் சேர்ந்த டிக்ஸன் சில்வெஸ்டர் டி சில்வா குணரத்ன ஆகியோராவர். இருவரும தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இவ்வழக்கின் விசாரணை நடைபெற்றபோது உதவிக் கல்வி அதிகாரி ஸி. டி. லொருஜ்ஜும் சாட்சியமளித்தார். அதன் பின் எதிரிகள் இருவருக்கும் கோர்ட்டுக்கலையும் வரை சிறைத்தண்டனையும் தலைக்கு 200 ரூபா மீது இரண்டு வருட நன்னடத்தைப் பிணையும் அளிக்கப்பட்டது.

மீன்களைப் பெருக்க நவீன முறை

கொழும்பு, டிச 9

வட மத்திய மாகாணத்தில் மொத்தம் 6000 சுத்த நீர் வாவிகள் இருக்கின்றன. அவற்றில் உள்ள மீன்களை அதிகப்படுத்த அரசாங்கம் ஓர் புதிய முறையை இங்கு புகுத்தும் எனத் தெரிகிறது இப்போது இங்குள்ள தமன்கடுவைப் பகுதியில் தினசரி 2 டன் மீன் பிடிக்கப்படுகிறதாம்.

ரூ. 7900 களவு

கொழும்பு, டிச. 10

தொலஸபாகே தலுஓயாத் தோட்டத்தில் இருந்து ரூ 7900 களவாடப்பட்டது சம்பந்தமாக ஓ. என். எம். அடுமை என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். எதிரியிடமிருந்து பணம் கைப்பற்றப் பட்டது விசாரணை நடைபெற்று வருகின்றன.

மின்சார உற்பத்தி-வினியோகம் தேசீய மயம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வண்டி மோதியதால் ஏற்பட்ட விபத்தில் 7 பேர்கள் மாண்டனர். 39 பேர்கள் காயமடைந்தனர்.

ஆஜ்மீரில் கலகம்

புதுடில்லி, டிச 8

இன்று ராஜபுதனத்திலுள்ள ஆஜ்மீரில் நடைபெற்ற கலகத்தில 6 பேர்கள் மாண்டனர். வெள்ளிக்கிழமை ஹிந்து-முஸலிம் சச்சரவு ஆரம்பமானதிலிருந்து இதுவரை மொத்தம் 12 பேர்கள் மாண்டனர். ஊரடங்குச் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ராணுவமும் போலிசும் பந்தோபஸது செய்து வருகின்றன.

காஷ்மீர் போர்

மஜ்ஜு மாகாணத்தில் இந்தியத துருப்புகள் 75 எதிரிகளைக் கொன்றன. ஊரிக்கருகிலும் அக்னூருக்கருகிலும் படையெடுக்க வந்து கூடிய எதிரிகளை இந்தியத் துருப்புகள் கலைத்து விரட்டின.

செஞ்சிலுவை சஙக உதவி

லண்டன், டிச. 8

இந்தியாவிலும், பாக்கிஸ்தானிலும் அகதிகள் கஷ்ட நிவாரணத்திற்கு பிரிட்டிஷ செஞ்சிலுவைச் சஙகத்தார் ஒரு லட்சம் பவுண் செலவு செய்ய திட்டம் போட்டிருக்கிறார்கள். வைத்திய உதவிக்கு மருந்துகள் அனுப்புவதில் ஏற்கனவே 25 ஆயிரம் பவுண் செலவு செய்திருக்கிறார்கள். நிவாரண நிதியளிக்கும்படி சஙகத்தார் 5 தினஙகளாக விடுத்த வேண்டுகோளால் 700 பவுண் கிடைத்தது லார்டு வேவல் 100 பவுண் கொடுத்தார். (ராய்ட்டர்)

இலங்கையில் கள்ளத்தனமாக இறஙக முயற்சி

15 இந்தியர்களுக்கு தண்டனை

கொழும்பு, டிச. 9

இந்தியாவிலிருந்துவந்து இலங்கைக் கரையில் கள்ளத்தனமாக இறங்க முயற்சித்த 15 இந்திய தமிழர்கள் நேற்று மாஜிஸடிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார்கள்.

அவர்கள் துறைமுகத்தில் சுங்கக் கலெக்டர் அனுமதியின்றி உலாத்திக்கொண்டிருந்தார்கள் அவர்களுக்கு வேலை எதுவும் கிடையாதிருப்பதை அறிந்த இன்ஸபெக்டர் அவர்களைக் கைதுசெய்தார். அவர்களுக்கு மாஜிஸடிரேட் தலா ஒரு வாரச் சிறைத்தண்டனை விதித்தார்.

மற்றும் 4 இந்தியர்கள் இவ்விதமாகக் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள்மீதுள்ள வழக்கை போலிசார் வாபஸ பெற்றதால் அவர்களை மாஜிஸடிரேட் விடுதலை செய்தார்.

துறைமுக சுகாதார அதிகாரியின் அனுமதிச் சீட்டின்றி கொழும்பில் இறஙகியதாக குற்றம்சாட்டப்பட்ட தொண்டனிதேவருக்கும் சீனி தேவருக்கும் மாஜிஸடிரேட் தலா ஒரு மாதச் சிறைத்தண்டனை விதித்தார்.

இன்று வரும் அரிசிக் கப்பல்

கொழும்பு, டிச. 10

எகிப்திலிருந்து 8400 டன் அரிசி ஏற்றி வரும் (ரங்கர்) கப்பல் இன்று வந்துசேரும்.

சந்திரா பீடி
CHANDRA BEEDI
M.R. SIVARAM & CO.,
604, B, NEW TOWN MADAMPE.
C.A.P.Co.

வட-இலங்கைத் தீவக சமாசம்

கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில்
(மேட்டுத்தெரு, கொழும்பு.)
1947-ம் ஞு மார்கழி மீ 14-ம் உ ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2-30 மணிக்கு
வட-இலங்கையில் உள்ள
அனலைதீவு காரைநகர் நெடுந்தீவு மண்டைதீவு
எழுவதீவு நயினாதீவு புங்குடுதீவு வேலணைதீவு

ஆகிய தீவகங்களுக்கெனப் பொதுவானதாய், இத்தீவக மக்களின் சமூக முன்னேற்றம், பொருளாதார அபிவிருத்தி அறிவாக்கம், என்னும் பொது நலன்களையே நோக்கமெனக் கொண்டு, அரசியல் விஷயக்கலப்பற்றதாய மேற்குறித்த

"வட-இலங்கைத் தீவக சாமசம்"

எனும் பெயருடன் பொது ஸ்தாபனம் ஒன்று நிறுவுதற் பொருட்டு ஓர் மகாநாடு கூட்டப்படும்

தீவக அன்பர்கள் யாவரும் தவறாது சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

வரவேற்புக்கழகத்தின் சார்பில்

வ. நவரத்தினம்,
தலைவர்

கொழும்பு.
10-12-47

சு. சர்வானந்தா
ச. செபஸதியாம்பிள்ளை
கௌரவ காரியதரிசிகள்

சிலோன் சீட்டுக்கம்பெனி லிமிடெட்,
இலங்கையில் சட்டப்படி இணைக்கப்பட்டது.
188, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு.
ஏலச் சீட்டு! ஏலச் சீட்டு!!

நாளாந்தம்-மாதாந்தம் சம்பளம்பெறும் சகோதரர்களின் வருங்கால பணத்தேவைகளை இலகுவில் சமாளிப்பதற்கும்-வியாபாரிகளின் அவசரப் பணத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் குடும்பங்களின் வருங்கால நன்மைக்காகவும் பணத்தை சேகரியுஙகள்.

நம் கம்பெனி சந்தாதாரர்களுக்கு தகுந்த சௌகரியஙகள் செய்து கொடுக்கப்படும்.
விபரங்கள் தபால் மூலமோ நேரிலோ பெறலாம்.
அரு. மெ. மெய்யப்ப செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.

'இளைஞன்' கிழமை இதழ்
வாசகர்களுக்கோர் நற்செய்தி!
1948 ஜனவரி 1-ம் தேதி தொடக்கம் பிரதி திங்கட்கிழமையும் "இளைஞன்" புத்தக உருவில் புதிய பல விஷயங்களுடன் வெளிவருவான்.
இன்றே சந்தாதாரர்களாக சேர்ந்துகொள்ளுங்கள்!
புதிய தொடர் கதையும் இந்த இதழில் ஆரம்பம்.
ஏஜண்டுகள் தங்கள் தேவைகளுக்கு முற்கூட்டியே விண்ணப்பிக்கவும்.
புதிய சந்தா விபரம்:
தனிப் பிரதி சதம் 10
வருட சந்தா ரூபா 5-00
இளைஞன் பிரசுராலயம்,
நிர். 2, கிராண்ட்பாஸ் வீதி,
கொழும்பு.

உழுது பயிரிடக்கூடிய 1 கோடி ஏக்கர் நிலம் உறங்குகிறது

(1ம் பககத் தொடர்ச்சி)

இப்பொழுது தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் உள்ள பிணக்குகளைத் தீர்ப்பதற்கு போக்குவரத்தை தேசிய மயமாக்குவது உதவியளிக்கும். நிதி மந்திரி தேசத்தின் பொருளாதாரம் க்ஷீணித்து விட்டதென்று கூறியுள்ளார். யுத்தகால அமிதலாபம் பொது மக்களிடமிருந்து அறவிடப்படவேண்டும். இந்த அமிதலாபத்தை பறிமுதல் செய்ய ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை யென்று கேட்க விரும்புகிறேன். மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. தேசத்திலே தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகள் எத்தனையோ இருக்கின்றன.

டெம்பிள்ட்ரீஸ கட்டிட திருத்த வேலைக்கு ரு 500,000 செலவிடப்பட்டுள்ளது. அநேக அரசாங்க இலாகாக்கள் நடத்தப்படுவதற்கு பொது நிதியிலிருந்து பணம் தேவையாக இருக்கிறது. அதிகாரிகள் அதிகபணங்களைச்சம்பளமாகப் பெறுகின்றனரேயன்றி அவர்கள் அதிக வேலைகளைச் செய்யவில்லை.

திரு. ஜே ஏ. மாட்டின்ஸ் பேசுகையில் அதிகரிக்கப்பட்ட வரிகள் ஏழைகளை வெகுவாகப் பாதிக்கின்றனவென்றும் தேசத்தின் விவசாய வேலைகள் கவனிக்கப்பட வேண்டுமென்றும், விவசாயப் படையினர் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டுமென்றும், சங்கக் கடைகள் திறமையாக நடத்தப்படவில்லையென்றும், இந்தக் கூட்டுறவு இயக்கம் திறமையான முறையில் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றும், முதியோர் கல்விக்கு அதிக ஊக்கம் அளிக்கப்படவேண்டுமென்றும், ஆஸ்பத்திரி நிர்வாக முறைகள் திருத்தப்படுவதுடன் நோயாளர்களைக் கவனிக்கப்படும் முறைகளும் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்றும் கூறினார்.

வேலையில்லாப் பிரச்னை

பாணந்துறை பிரதிநிதி திரு ஹென்றி பீரிஸ பேசுகையில் வேலையில்லாதோர் பிரச்னையே இன்று பெரும் பிரச்னையாக இருப்பதாகவும் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம எததகைய திட்டத்தையும் இதுவரை தயாரித்துக் கொள்ளவில்லையென்றும், தொழிலாளருக்கு வேலை கொடாமலும் அவர்களைப் பாதுகாக்காமலும் இருக்கும் அரசாங்கத்தை நல்ல அரசாங்கமென்று கூறமுடியாதென்றும், இன்று வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்கள் தேசம் முழுமையும் இருப்பினும் தொழிலாளருக்கு வேலைகள் தேடிக்கொடுக்க திட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்றும் மலேயாவிற்கு தொழிலாளரை அனுப்புவதாக பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் ஒப்பந்தம் செய்துளளதென்றும் இவ்விதம் மலேயாவுக்கு தொழிலாளரை அரசாங்கம் அனுப்புவதினால் எத்தனையோ குடும்பங்களை அரசாங்கம் குலைததுவிடுவதாகவும் மலேயாவுக்கு அனுப்பப்பட்ட தொழிலாளர் எததனையோ பேர்களது குடும்பங்கள் இலங்கையில் அவதிப்படுகின்றன என்றும் இலங்கையின் தொழில் சட்டங்கள் தொழிலாளரைப் பாதுகாப்பவைகள் அல்லவென்றும் முதலாளிகளின் நலன்களுக்காகவே அந்தச் சட்டங்கள் இருக்கின்றனவென்றும் கூறினார்.

மாலை நான்கு மணியானதால் கூட்ட நடவடிக்கை தேனீர் இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

தேனீர் இடைவேளைக்குப் பின்னர் சபை ஆரம்பித்த போது திரு. ஹென்றி பீரிஸ் தொடர்ந்து பேசினார். ஸ்தல ஸ்தாபன மந்திரி திட்டமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை யென்றும் தொழிலாளருக்கு கட்டப்பட்ட வீடுகள் பற்றியும் விவசாய தொழில் பற்றியும், பால் விநியோகம் பற்றியும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவுமுதலியன கொடுப்பது பற்றியும், தொழில் இலாகாவின் முயற்சிகள் எல்லாம் எக்காலத்திலும் பயனைக் கொடுக்கவில்லையென்றும் ஜவுளி நெசவு பற்றியும் குருடர் செவிடர்கள் பற்றியும் இவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாத்தளை தொகுதி பிரதிநிதி திரு. வி.டி நானயக்காரா பேசுகையில் தேசிய வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்றும் விவசாயத்தை யந்திரமயமாக்க வேண்டுமென்றும், ஸ்டேர்லிங் பாக்கிகளைக் கொண்டு விவசாய இயந்திரங்களை வாங்க வேண்டுமென்றும்மார்க்கட்டிங் இலாகா பற்றியும் அதிகரிக்கப்பட்ட வரிகள் பற்றியும் கூறினார்.

சாவகச்சேரி தொகுதி அங்கத்தவர் திரு.வி.குமாரசுவாமி வரவு செலவுத் திட்டத்தை தயாரித்துள்ள முறைபற்றி கண்டித்ததுடன் கடந்த வருட இறக்குமதி-ஏற்றுமதி பற்றியும் குறிப்பிட்டுவிட்டு தொடர்ந்து பேசியதாவது:-

ஸடேர்லிங பாக்கிகள்

ஸடேர்லிஙபாக்கிகள்சம்பந்தமான விஷயம் மிகவும் முக்கியமாகும். ஸடேர்லிங் பாக்கியாக இருந்த 88 கோடியே 90 லட்சம் ரூபாயில் உணவுப் பொருள்களுக்கு அரசாங்க உதவிப் பணமாக 45 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது இப்பொழுது அரசாங்கம் உதவிப் பணமாக கொடுத்துவரும் ரீதியில் தொடர்ந்து இருக்குமானால் இன்னும் இரண்டு வருட காலததில் எங்களுடையஸடேர்லிங் பாக்கிகள் முழுவதும் செலவாகிவிடும் இலங்கை பொருளாதாரததில் சூன்ய நிலையை அடைந்து விடுமென்பதுதான் அதன் அர்த்தமாகும். முக்கியமான பொருள்களை வாங்குவதற்கு மட்டுமே ஸ்டேர்லிங பாக்கிகளை உபயோகிக்க வேண்டும்.

புசல் நெல்லுக்கு ரூ. 20 கொடுஙகள்

இலங்கையில் நேரடியான வரிகள் மூலம் அதிகவருமானம் கிடைக்க மாட்டாது. இன்று ஒரு கொத்தரிசி 62 சதமாக வாஙகி 36 சதமாக விற்கப்படுகிறது. வாழ்க்கைச் செலவை நான்கு புள்ளிகள் குறைப்பதற்கு அரசாங்கம் 10 கோடி ரூபாய் செலவிட வேண்டுமென்று கூறப்பட்டது. உள்நாட்டு விவசாயிகளுக்கு ஒரு புசல் நெல்லுக்கு அரசாங்கம ரூ. 20 கொடுததால் உள்நாட்டிலே நெற்சாகுபடி மிகவும் அதிகரிக்கும். கிருஷிகம் கவனிக்கப்படவில்லை. தேசத்தின் தேவையில் மூன்றில் ஒரு பங்கு நெல்லைத்தான இங்கு உற்பத்தி செய்யபபடுகிறது. 17 வருடங்களாக கிருஷிகத்துக்கு பணம் செலவழிககப்பட்டு வரப்படுகிறது. ஆனால் இன்றுவரை ஒன்றும் பயன கிடைத்ததில்லை

கட்டுப்பாட்டு இலாகாக்களின் ஊழல்கள்

இன்றுள்ள பல கட்டுப்பாட்டு இலாகாக்களிலும் லஞ்சமும் ஊழல்களும்தான் மலிந்து விட்டன. "பெர்மிட்" பெறுவதற்குக்கூட ஒருவர் ஏதும் கைக்கூலி கொடுத்தேயாகவேண்டும்.

கள்ள மார்க்கெட்டில் பொருள்கள்

வாழ்க்கைததரத் தைப்பற்றி தயாரிககப்பட்டுவரும் புள்ளி விபரங்கள் ஒரு மோசடியேயாகும். இன்று விவசாயிகளும் தொழிலாளரும் கள்ள மார்க்கெட்டுகளில் வாஙகும் உணவுப் பொருட்களில்தான் வாழ்க்கையை நடத்துகின்றனர். கட்டுப்பாட்டுக்குள் உளள 50 சதவிகித பொருள்களும் கள்ளமார்க்கெட்டுக்கே செல்கின்றன. இந்த விதமாகப் பொருள்கள் கள்ளமார்க்கெட்டுக்குச் செல்வதை கூட்டுறவு இயக்கடைரக்டர் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கூட்டுறவு இயக்கம் திறம்பட நடத்தப்படுவதாலேயே மக்களின் சந்தோஷ வாழ்க்கை தஙகியிருக்கிறது.

ஒரு கோடி ஏக்கர் நிலம்

விவசாயத்துக்கு எடுக்கக் கூடிய ஒரு கோடியே 60 லட்சம் ஏக்கர் நிலத்தில் 60 லட்சம் ஏக்கர்தான் விவசாயத்துக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மிகுதியான ஒரு கோடி ஏக்கரும் கவனிக்கப்படாது கிடக்கின்றது.

கால்நடை உற்பத்தி

கால் நடை உற்பததியில் விவசாய மந்திரி அதிக கவனம் செலுததவேண்டும். தேசப் முழுமையிலும் கால்நடை உற்பதிப் பண்ணைகளைத திறகக வேண்டும். தேசததிலே அதிக பால் விநியோகிக்கப்பட இது முக்கியமாகும்.

கரையூர் திட்டம் ஒரு பெரும் மோசடி

கரையூர் சேரி ஒழிப்புக் திட்டம் ஒரு பெரும் மோசடியேயாகும். 23 வருடங்களுக்குச கரையூர் மக்கள் இந்தத் திட்டத்துக்காகக் கதறிக்கொண்டிருந்தனர். கடந்த அரசாங்க சபை கலைக்கப்படும் முன் உள்நாட்டு மந்திரி இந்தத் திட்டததை ஆரம்பித்தார். ஆனால் இத்திட்டம் ஒப்பேறுமா என்பது இனிமேலதான் கவனிக்கப்பட வேண்டியது. இது மக்களை ஏமாற்றும் ஒரு முறையென்றே கருதுகிறேன்,

பயனற்ற செலவுகள்

இந்திய அரசாங்கம் பதவி ஏற்ற சொற்ப காலத்துக்குள் எத்தனையோ பெரிய கிருஷிகத திட்டஙகளை யெல்லாம் எடுத்துள்ளது. இகதிட்டஙகளெல்லாம் கோடிக்கணக்கான பணத்தை விழுங்க இருக்கின்றன இகதேசத்திலே கடந்த 17 வருடங்களாக சோடிக்கணக்காக செலவிட்டும் உணவு உற்பததிக்கு உருப்படியான வேலைகளைச் செய்ய முடியவில்லையென்றால் அது தேசத்தின் மந்திரிமாரின் நிர்வாகத் திறமையீனததைத்தான் காட்டுமேயன்றி வேறில்லை.

இந்திய ரூபாய் நாணயத்துக்கு இலங்கை ரூபாய் நாணயம் சமமாக இல்லை. கள்ள மார்க்கெட்டில் இந்திய ரூபாய் நாணயத்துக்கு மூன்று கொத்து அரிசி வாங்கலாம். ஆனால் இலங்கை ரூபாய் நாணயத்துக்கு கள்ள மார்க்கெட்டில் அரைக கொத்தரிசிதான் வாங்க முடியும் இப்பொழுது இலங்கை ஸடேர்லிங நாடுகள் பிணைப்பிலிருந்து விடுபட்டுவிட்டது. இந்திய நாணயத்துடன் இலஙகை நாணயத் தொடர்பு இருக்கிறது.

இலங்கையின் தொழிலாளரும் விவசாயிகளும் பட்டினி கிடக்கவேண்டியதன் எல்லைக்கு வந்துவிட்டனர். தேசத்தின் செல்வத்தைக் கூட்ட தகுந்த உதவிகள் விவசாயிகளுககு அளிக்கப்பட வேண்டும். இலவசக் கல்வியின் பலாபலன்கள் எல்லோருக்கும் அளிக்கப்படவில்லை.

இத்தருணத்தில் திரு குமாரசுவாமி ஒரு மணி நேரமாக பேசுவதாகவும் மாலை 6-20 மணியாகிவிட்டதென்று சபாநாயகர் குறிப்பிட்டார். திரு குமாரசுவாமி தொடர்ந்து பேசுகையில் போக்கு வரத்து மந்திரியின் வீடமைப்புத் திட்டத்தைக் கண்டிதது தேசத்திலே ஒரு ரப்பர் தொழிற்சாலையை ஸ்தாபிக்காததற்கு மந்திரிகள் மீது குற்றஞ் சாட்டியும் இலஙகையில் டயர்கள் பெருந்தொகையில் உற்பத்திசெய்ய முடியுமென்றும் கூறினார். அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:-

சாவகச்சேரி தொகுதியிலுள்ள டிஸ்டிரிக்ட்ரஸ்தாகமிட்டியின் கீழுள்ள ரஸ்தாக்கள் மிக கேவலமான நிலையில் இருக்கின்றன. இந்த ரஸ்தாக்களைத் திருத்த ஆக மூன்றரை லட்சப ரூபாய்தான் மான்யமளிக்கப்பட்டிருந்தது. மராமத்து இலாகாவின் ரஸ்தாக்களுக்குச் செலவிடப்படுவது அதிகமாக இருக்கிறது.

வரவு செலவுத் திட்டம் உண்மையானதல்ல. தேசததிலுள்ள விவசாயிகள் தொழிலாளர்களின் வறுமையை ஆலோசிககுமிடத்து இந்தபட்ஜெட் தகுதியானதாக காணப்படவில்லை

ரத்தினபுரி தொகுதி திரு எவி. ஈ. அட்டியகல பேசுகையில் வெண்ணெய்க்கு அதிகரிக்கப்பட்ட வரிபற்றியும் அரிசி நிலைபற்றியும் விவசாய மந்திரி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் வைத்திய வசதிகள் பற்றியும் தமது தொகுதி நிலைமைகள் பற்றியும் கூறினார். டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில் பொருளாதார நெருக்கடியான தருணத்தில் தேச நிர்வாகத்தில் அதிக மந்திரிகள், பாராளுமன்றக் காரியதரிசிகள் முதலியோர் இருப்பதுபற்றி கண்டித்து விட்டு சர்வ தேசிய தொடர்புகளை வைத்திருப்பதன் மூலமே நெருக்கடிகளைத் தவிர்க்கமுடியுமென்றும் வெளிநாடுகளிலிருந்து உணவு மற்றும் உற்பத்திப் பொருள்கள் முதலியவற்றை எதிர்பார்க்க வேண்டியிருப்பதாகவும் இந்த பட்ஜெட், தேசத்தின் பொருளாதார சூன்யத்தை அம்பலப்படுத்துவதாகவும் இப்பொழுதில்லாத ஒரு பொருளாதார அடிப்படையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பொழுதுள்ள மந்திரிமார் புத்த சமயத்தை உலகபூராவும் பரப்ப விரும்புகின்றனரென்றும் சர்வ தேச சகோதரத்துவத்தை ஏற்படுத்த அவர்கள் கையாளும் முயற்சியே அதுவென்றும் ஆனால் இடதுசாரிகள் சர்வதேச அடிப்படையில் தேச பொருளாதாரத்துக்கு அடிகோலினால் அதனை குற்றங் கூறி தள்ளுகின்றனர் என்றும் சர்வ தேச அடிப்படையில் பொருளாதாரத் திட்டம் இருக்கவேண்டுமென்றும் கூறினார்.

டாக்டர் சில்வா தொடர்ந்து பேசுகையில தேச பொருளாதாரம், உற்பத்தி, சமூகசேவை, உலக பொருளாதார நெருக்கடி முதலியவைபற்றி பேசினார் நேரம் இரவு 8 மணியானதால் போஜன இடை வேளைக்காக சபை ஒத்திவைக்கப்பட்டது.

இரவு போஜனத்தின் பின் டாக்டர் சில்வா தொடர்ந்து பேசுகையில் தேச பொருளாதார அபிவிருத்திபற்றியும், விவசாய அபிவிருத்தி பற்றியும், ஸ்டேர்லிங்பாக்கிகள், அதிக வரிகள் முதலியனபற்றியும், வைத்திய வசதிகள், கூட்டுறவு இயக்கம், தேச மக்களை முதலாளிகள் சுரண்டுவதைத் தடுக்க வேண்டுமென்றும் கூறினார். இத்துடன் சபை நடவடிக்கை இன்று பிற்பகல் 1 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

உலகைத் திடுக்கிடச் செய்யும் உயரிடத்துக் காதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வயது 55. விதவை. இவர் சீன உள்நாட்டு யுத்தத்தை விரும்பாது சீன சர்க்கார் கட்சியான கோமின்டாங் கட்சியும் கமியூனிஸ்ட் கட்சியும் சமரசமாகப் போகவேண்டுமென்று வாதாடுகிறவர். இதனால் இவர் கமியூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்று கூடக் கருதி இவரது குடும்பம் இவரை தஙகளைச் சேர்ந்தவராகக் கருதுவதில்லை இதன் காரணமாக இவர் சதா கண்காணிக்கப்பட்டு வந்தார், அரசாஙகம் இவரை மும்முரமாகக் கண்காணித்து வந்தபடியினாலே இவருக்கும் அமெரிக்க ராணுவ அதிகாரிக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்தைக் கண்டுபிடிக்கும்படியாயிற்று. அக் கடிதப் போக்குவரததிலிருந்து இவர்களது காதல் நிகழ்ச்சிகளை அரசாஙகம் தெரிந்துகொள்ள முடிந்தது

கேப்டன் டானிபாம் சுமாரான வாலிப வயதுடையவர் இரண்டாவது உலக யுத்த காலத்திலே அவர் ஸ்ரீமதி சன்யாட் சென்னை, சுங்கிங் நகரில் முதன் முதலாகச் சந்திததார். இருவரும் நண்பரானார்கள். நாளடைவில் இந்த நட்பு காதலாக மாறிக்கொண்டு விட்டது யுத்தம் முடிந்ததும் கேப்டன் டானிபாம் ஷாங்கை நகருக்கு மாற்றப்பட்டார். ஸ்ரீமதி சன்யாட் சென்னும் காதலனைப் பின்தொடர்ந்து சுங்கிங் நகரிலிருந்து ஷாங்கை நகருக்கு வந்து வசிக்கலானார். கேப்டன் டானிபாமின் சகோதரர்நோய்வாய்ப்பட்டு அபாய நிலையிலிருப்பதாக அமெரிக்காவிலிருந்து அவருக்குத் தந்திச்செய்தி கிடைக்கவே சீன அரசாங்கம் அவரை அமெரிக்காவுக்குச் செல்ல விடாதபடி தடுக்க முயற்சித்தது; முடியவில்லை. கேப்டன் டானிபாம் அமெரிக்கா வந்துவிட்டு இப்பொழுது ஷாங்கைநகருக்கு மீண்டும் திரும்பிவிட்டார்.

(ராய்ட்டர்)

'பட்டினிப் பட்டாளம்'

கொழும்பு, டிச 8

வேலையில்லாத் திண்டாட்டமுள்ள தொழிலாளர்கள் கூட்டங் கூடி ஒரு மதயஸதாபனம் ஏற்படுத்திக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள். அக்கூட்டத்தில் அந்தஸதாபனத்திற்கு திரு. பி. எஸ. இ. பெரைரா தலைவராகவும் திரு. சார்லஸ், டி சில்வா கந்தாரா காரியதரிசியாகவும் தெரிந்தெடுககப்பட்டனர் பல கூட்டங்கள் நடத்தவும், பிரதிநிதிகள் சபை நோக்கி "பட்டினிப் பட்டாளப் படையெடுப்பு" நடத்தவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தியாவுக்குச் சொந்தமான 160 ரயில் பெட்டிகள்

விலைக்கு வாங்க இலங்கை தீர்மானம்

கொழும்பு, டிச. 9

யுத்தகாலத்தின் அவசிய தேவைகளுக்காக 250 ரயில் பெட்டிகள் இலஙகைக்கு இந்தியாவில் இருந்து ஒப்பந்தத்தின் பேரில், கொண்டுவரப்பட்டன. அவற்றில் 160 ஐ இலங்கை அரசாங்கம் விலைக்கு வாங்கத் தீர்மானித்தள்ளது இவற்றின் மொத்த விலை 10 லட்சமாகும் என்று தெரிகிறது மேற்படி 160 பெட்டிகளையும் இலஙகையின் உபயோகத்திற்கேற்பத் திருத்தி எடுக்க மொத்தம் ஒரு லட்ச ரூபாய் செலவழியலாம் என்று அறியப்படுகிறது.

நீதிபதிகளுக்குச் சுகயீனம்

திங்கட்கிழமை ஒரு கோர்ட்டில்தான் விசாரணை

கொழும்பு, டிச 9

கொழும்பில் உள்ள நீதிபதிகளில் இருவருக்குச் சுகயீனம் ஏற்பட்டதின் காரணமாக ஒரு நீதிஸ்தலத்திலே நேற்று வழக்குகள் விசாரிக்கப்பட்டன. சுகயீனமுற்றவர்கள் எஸ். எஸ். ஜே. குணசேகரா, என். சின்னததம்பி ஆகியோராகும். வி. எல் செயின்ட் கிளெயார் ஸ்வானுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட புதிய உதவி நீதிபதி ஜே. எச். வி. எஸ். ஜயவிக்ரமா டிசம்பர் 15-ந் தேதியே பதவி ஏற்பாராம்.

மோட்டார் சாமான்கள் களவு

கொழும்பு, டிச 8

கொழும்பு நகரசபை எல்லைக்குள் வீதிகளில் நிறுத்தப்பட்டிருக்கும் மோட்டார் கார்களின் சாமான்கள் மாயமாக மறைகின்றன. திருட்டுப் பேர்வழிகள் காரிலுள்ள சாமான்களைக் கழற்றிகொண்டு செல்கிறார்கள். சில நாட்களாக இவ்வித திருட்டுகள் கொழும்பில் நடைபெற்று வருகின்றன சனிக்கிழமை பண்டு பம்பலப்பிட்டியா, காலி ரோடிலுள்ள டாக்டர் ஜீ. எப். மார்ட்டினஸ் தனது வைத்திய சாலை முன்பு காரை நிறுத்தியிருந்தபோது அதன் கதவிலுள்ள கைப்பிடியை யாரோ திருடி எடுத்துச் செல்ல முயற்சித்தனர். அதிலிருந்த மற்றச் சாமான்களை திருடர்கள் கழற்றிச் சென்றனர்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டிற்காக, 1947-ம் ஆண்டு டிசம்பர் மீ 10உ இந்த பத்திரிகை 194A, கட்டாரத்தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெற

கிங்ஸ்லியில்
தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா



தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். [illegible],
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

ஐசிங் சுகர்
இலங்கையில் முதல்தரமானது
குயின் (ராணி) மார்க்.
இப்போ எங்களுக்கு ஏற்பட்ட சில வசதிகளால் விலை மிகவும் குறைக்கப்பட்டு இருக்கின்றது.
7 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 160-00
28 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 150-00
எங்கள் ஸ்டோர் நிர். 307, செட்டியார் தெருவில் (சீ ஸ்டிரீட்) எடுத்துக்கொள்ளலாம்.
குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி,
861, அளுத்மாவத்தை ரோடு,
முகத்துவாரம்,
கொழும்பு.
தந்தி "Confection" 'போன்: 4511

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்குஇணையற்றது
தாதுசத்துக்கள் நிறைந்த மேற்கண்ட எமது குளிர் பானங்களைக் கைவிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—
ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்
தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.
ஏஜன்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜன்டுகள் தேவை

கட்டிடத்துக்கு
தேவையான சிமந்தும்
மற்றச் சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன்: 2029 டெலிகிராம்: 'ENVAITLIN'
கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.